விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 01 திங்கட்கிழமை (17.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

## வவுனியாவில் ரயில் - கார் மோதி கோர விபத்து

# ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பெண்கள் பலி

## இருவர் படுகாயம்; சாரதி தப்பிப்பு



**(வவுனியா) யாழ். நெடுந்தீவை சேர்ந்த ஒரே குடும்பத்தில் நான்கு பெண்கள் ரயில் விபத்தில் உயிரிழந்துள்ளனர். வவுனியா ஓமந்தை பன்றி கெய்தகுளம் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ரயிலுடன் கார் மோதுண்டமையால் இந்த கொடூரம் இடம்பெற்றுள்ளது.**

யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலுடன் சிறிய கார் ஒன்று. மோதுண்டு விபத்து ஏற்பட்டது.

பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போதே விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ9 வீதியில் இருந்து பன்றிகெய்தகுளம் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு செல்வதற்காக ஆலய வீதி ஊடாக பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை கடந்த போதே இவ் விபத்து இடம்பெற்றது.

இந்த அனர்த்தத்தில் 23☛

## வலம்புரிச் செய்தியாளருக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல்

### அஸ்மினின் ஊடக இணைப்பாளருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழின் அலுவலகச் செய்தியாளரை வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மினுடைய ஊடக இணைப்பாளர் என். எம். அப்துல்லாஹ் தொலைபேசியில் அச்சுறுத்தியமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தொலைபேசி மூலமாக வலம்புரி நாளிதழின் அலுவலகச் செய்தியாளருடன் தொடர்பு கொண்ட 24☛

## அனைத்து பல்கலைக்கழக தமிழ் விழா -2018 இன்று

(யாழ்ப்பாணம்)

அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்தும் மாபெரும் தமிழ் விழா- 2018 யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் தமிழமுதம் எனும் தொனிப்பொருளில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம் எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புகழ்பெற்ற இந்திய ஓவியர் புகழேந்தி கலந்து கொள்வதுடன் இலங்கையில் அழிந்துபோகும் தமிழரின் கலைகளை மீள் உருவாக்கம் செய்யும் வகையில் 23☛

## சுன்னாகத்தில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - ஐயனார் கோவில் பகுதியில், நேற்று அதிகாலை நேரத்தில் வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல், 24☛

## ஆட்சியை கவிழ்க்க இந்தியா உதவும்!

### மகிந்த அணி

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்க இந்தியாவின் உதவி கிடைக்கும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப் 24☛

## 4-வது நாளாக தொடரும் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம்

(அநுராதபுரம்)

அநுராதபுர சிறைச்சாலையில் எட்டு அரசியல் கைதிகள் முன்னெடுத்து வரும் உண்ணாவிரதப் போராட்டம் இன்று 24☛

## பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களிடம் ரி.ஐ.டி விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தில் தமிழீழ அலங்கார வளைவில் அம்மன் வீதி உலாவந்த செய்தி தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வலம்புரி, உதயன், தினக் 23☛

## விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு!



### அரசியலமைப்பை மீறியதாக 35 ஆண்டுகளின் பின் முதல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. அரசியலமைப்பின் 157 (அ) பிரிவை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சுமார் 35 ஆண்டுகளுக்குப் பின் முதன்முறையாக விஜயகலா மகேஸ்வரனுக்கு இந்த வழக்குத் தாக்கல் செய்யப் 24☛

## 20-வது திருத்தம் தோல்வி முயற்சி மகிந்த கருத்து.

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் 23☛

## ஜனாதிபதி மைத்திரியின் கவனத்துக்கு அரசியல் கைதிகளின் விவகாரம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை 23☛

## சிவனடிபாதமலை பெயர்பலகையை மீண்டும் பொருத்தப் பணிப்பு

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

சிவனடிபாதமலை என்ற தமிழ் பெயர் பலகையை மலையடிவாரத்தில் மீண்டும் பொருத்தும்படி அமைச்சர் மனோகணேசன் நுவரெலியா மாவட்டச்செயலருக்கு அறி வித்துள்ளார்.

அத்துடன் சிவனடிபாதமலை என்ற தமிழ் பெயர் பலகை யாரால் எப்படி, எந்த அடிப்படையில் அகற்றப்பட்டது என்பது தொடர்பில் உடனடியாக ஆய்வு அறிக்கை அனுப்பும்படியும்,சிவனடிபாதமலை என்ற தமிழ் பெயர் பலகையை மலையடிவாரத்தில் மீண்டும் பொருத்தும்படியும் நேற்றைய தினம் அறிவித்துள்ளார். (மு-9)

## இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சதீவில் விரட்டியடிப்பு

(பனிக்கன்குளம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கச்சதீவில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதால் அங்கு பெரும் பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் சுமார் 250 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இந்நிலையில் அங்கு இலங்கைக் கடற்படையின் 20க்கும் மேற்பட்ட ரோந்துப் படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 23☛

# உணவு விலை 5 ரூபாயால் அதிகரிப்பு!

1 கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யப்படும் பாண், பனிஸ் உள்ளிட்ட அனைத்து உணவுப்பொருட்களின் விலைகளை 5 ரூபாயால் அதிகரிக்க, சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பையடுத்து, பாண் மற்றும் கொத்து ரொட்டியின் விலையை அதிகரிப்பதாக சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் கடந்த வாரம் அறிவித்த நிலையில், தற்போது கோதுமை தயாரிப்பிலான அனைத்து உணவுப்பொருட்களின் விலையை அதிகரிக்க சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (மு)

## மரண அறிவித்தல்



## கந்தையா மாசிலாமணி (வீரசிங்கம்)

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இல. 506 7ம் யுனிற் இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாசிலாமணி செல்லமாக அழைக்கப்படும் வீரசிங்கம் அவர்கள் நேற்று 16.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வைத்திலிங்கம்-பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், பவானி, ராணி ஆகியோர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், வீரபாகு, அமிர்தநாயகி, நாகராசா, குணமணி, பாக்கியம், நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அம்பி, சந்திரா ஆகியோரின் மைத்துனரும் விஜயறஞ்சினி, காலஞ்சென்ற விஜயகுமார், இந்திரகுமார், விஜயகுமாரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்யையும் லோகநாதன், கலைவாணி, றஜிதா ஆகியோரின் மாமனாரும் சுஜிதன், சதுர்ஜனா, யதுர்சன், ஹரணியா, கம்சா, கவின், ஐஸ்வர்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நாளை (18.09.2018) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் இராமநாதபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சி-3859

தொடர்புக்கு:- 077 374 7030
7ம் யுனிற், இராமநாதபுரம்

தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## இரத்தினசிங்கம் பிரசாத்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 24 - 02 - 1987 |  | 15 - 09 - 2018 |


ஐயனார் கோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பிரசாத் 15.09.2018 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இரத்தினசிங்கம்-மோகனாம்பிகையின் செல்வப்புதல்வனும், ராதிகா, நிரோசிகா (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு சகோதரனும், இரத்தினகாந், யோகதாஸ் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனரும், மஜிசாந், சன்விகா, தாசிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 10 மணியளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0772334184 (சி-3856) தகவல்:-குடும்பத்தினர்

# சமூக அமைப்புக்களின் எதிர்ப்பை அடுத்து காளை மாட்டை வெட்ட பொலிஸார் தடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இறைச்சிக்கு வெட்டப் போவதாக காட்சிப்படுத்திய காளை மாட்டை வெட்டுவதற்கு யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுத் தடை விதித்துள்ளனர்.

மிகப்பெரிய நல்லினக் காளை மாடு ஒன்றை இறைச்சிக்கு வெட்டப்போவதாக காட்சிப்படுத்தி விளம்பரம் செய்யப்பட்ட நிலையில், மேற்படி சம்பவத்தால் சலனம் அடைந்த இந்து சமய, சமூக ஆர்வலர்கள் இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அதேவேளை சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி வட பகுதிக்கான பிரதிப்பொலிஸ்மா அதிபரை நேற்றையதினம் காங்கேசன்துறைக்குச் சென்று சந்தித்து தமது கவலையைத் தெரிவித்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வடக்கிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் விடுத்த உத்தரவின் பேரில், நல்லினக் காளை மாட்டை வெட்டுவதற்குப் பொலிஸார் நேற்று தடை விதித்துள்ளனர். (மு)

# கஞ்சா மீட்பு

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்தில் நேற்று அதிகாலை இளைஞன் ஒருவரைக் கேரளா கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்த புகையிரதத்தில் 19கிலோ 265கிராம் கேரளா கஞ்சாவினை பொதி செய்து எடுத்து வந்த ஸ்ரீராம் விஜிதன் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 34வயதுடைய இளைஞன் ஒருவரையே கைது செய்துள்ளதாகவும் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு கஞ்சாவினை எடுத்து வந்ததாகவும் பொலிசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (மு-250,281)

# விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்ற விபத்தில் படுகாய மடைந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் ஏ9 வீதியில் மாங்குளத்திற்கு அண்மித்த பகுதியில் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் காயமடைந்த யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பிரசாத (வயது-30) என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (மு-78,315)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.

தொடர்பு: 0763836129 (5680)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் இரத்தினம் உமாகாந்தன்


20.08.2018 அன்று காலமான அமரர் இரத்தினம் உமாகாந்தன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 19.09.2018 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் குடும்பத்தினருடன் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பிருந்தாவனம்"
மில்லேன், ஏழாலைமேற்கு, ஏழாலை (5698)

-குடும்பத்தினர்

# போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்றால்
# ஐ.நா.விசாரணைக்கு அனுமதிக்காதது ஏன்?



## மகிந்தவிடம் பழ.நெடுமாறன் கேள்வி

(கொழும்பு)

**இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறவில்லையென்றால் ஐ.நா. விசாரணைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்காதது ஏன் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் கேள்வியெழுப்பியுள்ளார்.**

இந்தியாவிற்கு அண்மையில் விஜயம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கையில் ஒரு இனத்திற்கு எதிராக யுத்தம் நடைபெறவில்லை எனவும், புலிகளுக்கு எதிராக மாத்திரமே யுத்தம் இடம்பெற்றதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் இது தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே பழ.நெடுமாறன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றமை குறித்து, ஐ.நா. மனித உரிமை பேரவை குற்றம் சுமத்தியிருந்தது. அதுகுறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அப்போது ஐ.நா. மனித உரிமை ஆணையராக இருந்த நவநீதம்பிள்ளை, நேரடியாக இலங்கைக்கு சென்று நிலைமையைப் பார்த்துவிட்டு வந்து, அவர் வெளியிட்ட அறிக்கையிலும் அதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார். பொது விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்பட்டமான மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இதுகுறித்து விசாரிக்க வேண்டுமென குறிப்பிட்டபோது, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தை விசாரிப்பதற்கு அனுமதிக்க முடியாதென அப்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறிவிட்டார்.

இப்போது போர்க்குற்றமே நடக்கவில்லை என கூறினால் எப்படி? ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு என்பது ஒரு தனிநபர் அல்ல. பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கின்றது.

அதை மீறி போர்க்குற்றம் இடம்பெறவில்லையென கூறினால், மனித உரிமை ஆணையத்தின் விசாரணை ஆணைக்குழுவை அனுமதிக்க மறுப்பது ஏன்? போர்க்குற்றம் நடக்கவில்லை என்றால், தாராளமாக விசாரணை நடத்துங்கள் என்றுதானே சொல்லியிருக்க வேண்டும்.

போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என மகிந்த ராஜபக்ஷ கூறுவதானது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் மழுப்பல் போன்றதாகும்" என பழ.நெடுமாறன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்டியில் எம்.ஜி.ஆரின் ஜனன தினம் அனுஷ்டிப்பு

## தமிழ்நாடு அமைச்சர் பங்கேற்பு



(கண்டி)

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான கண்டியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

கல்வி அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ்நாடு பள்ளிக் காவல்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்துகொண்டார்.

அத்துடன் எம்.ஜி.ஆர் தொடர்பான புகைப்படக் கண்காட்சியையும் அவர் ஆரம்பித்து வைத்ததோடு பரிசில்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சிவகாசி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

# மகிந்த-மோடி இடையில் இடம்பெற்றது தனிப்பட்ட கலந்துரையாடல் மட்டுமே

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுடன் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை இருப்பது மிகவும் முக்கியமான விடயம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட இந்திய விஜயம் இந்த நிலைமையை வளர்ச்சியடைய செய்த ஒரு சந்தர்ப்பம் எனவும் இதன் போது இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மெனிக்ஹின்ன விகாரையில்வைத்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மோடிக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்றது அரசியல் கலந்துரையாடல் இல்லை எனவும் அது தனிப்பட்ட கலந்துரையாடல் ஒன்று மட்டுமே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயம் அரசியல் ரீதியான நோக்கத்தில் மேற்கொண்ட விஜயம் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்தும்



"மாபெரும் தமிழ் விழா 2018"
இடம் :- யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்

தமிழமுதம் எனும் தொனிப்பொருளில் 17.09.2018 இன்று திங்கட்கிழமை
"நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம்"
எனும் கருப் பொருளில்!...

பிரதம விருந்தினராக புகழ்பெற்ற இந்திய **ஓவியர் புகழேந்தி ஐயா** அவர்கள் பங்கு கொள்வதுடன் இலங்கையில் அழிந்து போகும் தமிழரின் கலைகளை மீள் உருவாக்கம் செய்யும் வகையில் தமிழரின் பாரம்பரிய கலைகளை உள்ளடக்கிய மாபெரும் தமிழ்விழா இலங்கையில் முதல் முறையாக **இந்தியாவின் செம்மொழி மாநாட்டிற்கு** இணையான பிரமாண்டமான மேடையமைப்பில்

**காலை 9 மணி முதல் நள்ளிரவு 11 மணிவரை கலைகளால் ஒன்றிணைவோம்**

அனுமதி இலவசம்

இலங்கையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம் போன்ற அனைத்து இடங்களையும் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம் பெறவுள்ளன.

ஊடக அனுசரணை
வலம்புரி

அனைவரையும் அன்பாக அழைக்கும்
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# ரஹீம் 'ரம்மியமான' சதம்

## இலங்கையை 'பாடாய்ப்படுத்தியது' பங்களாதேஷ்



ரஹீமின் ரம்மியமான சதம்கைகொடுக்க பங்களாதேஷ் அணி, 137 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது. லசித் மலிங்கவின்அபார பந்துவீச்சு சோபை இழந்தது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட ஆறு அணிகள் பங்கேற்கும் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடக்கிறது.

இதன் 'பி' பிரிவு லீக் போட்டியில் நேற்று இலங்கை, பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்டசா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**சபாஷ் மலிங்க**

கடந்த ஒரு ஆண்டாக இலங்கை அணிக்காக எவ்வித போட்டிகளிலும் பங்கேற்காத வேகப்பந்து வீச்சாளர் மலிங்க நேற்று மீண்டும் களமிறங்கினார். பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், லிட்டன் தாஸ் ஜோடி ஆரம்பம் வழங்க, மறுபக்கம் மின்னல் வேகத்தில் பந்துவீசினார் மலிங்க.

முதல் ஓவரின் ஐந்தாவது பந்தில் லிட்டன் தாஸ் 'டக்' அவுட்டானார். பின் வந்த 'சீனியர்' சகிப் அல் ஹசனை (0), ஒரே பந்தில் (6ஆவது) போல்டாக்கினார் மலிங்க.

பங்களாதேஷ் அணி ஒரு ஓட்டத்துக்கு 2 விக்கெட்டுக்களை இழந்தது. அனுபவ வீரர் தமிம் இக்பால் (2) இடது கை மணிக்கட்டு பகுதியில் ஏற்பட்ட வலி காரணமாக 'ரிட்டயர்ட் ஹேர்ட்' முறையில் வெளியேற சிக்கல் அதிகரித்தது.

இந்நிலையில் மிதுன் (1), முஷ்பிகுர் (10) இருவரும் கொடுத்த 'பிடி' வாய்ப்புகளை இலங்கை வீரர்கள் கோட்டை விட்டனர். இந்த வாய்ப்பை கெட்டியாகப் பயன்படுத்தி இருவரும் அரைச்சதம் அடிக்க, பங்களாதேஷ் அணி (134 ஓட்., 2 விக்.,) மீண்டது.

**மீண்டும் சறுக்கல்**

மறுபடியும் மிரட்ட வந்த மலிங்க, இம்முறை மிதுனை (63) வெளியேற்றினார். மகமதுல்லா (1) அபோன்சோவிடம் சரிந்தார். மொசாதெக் (1) நீண்ட நேரம் நிலைக்கவில்லை. மெகிடி 15, மொர்டசா 11, ரூபல் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட் சரிந்த போதும் மனம் தளராமல் போராடினார் முஷ்பிகுர். லக்மல் பந்தில் பவுண்டரி அடித்த இவர், ஒருநாள் அரங்கில் 6 ஆவது சதம் எட்டினார். இவர்144ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க, பங்களாதேஷ் அணியின் இன்னிங்ஸ் 49.3 ஓவர்களில் 261 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

**விக்கெட் மடமட...**

இலங்கை அணிக்கு தரங்க, மெண்டிஸ் ஜோடி ஆரம்பம் வழங்கியது. மொர்டசா பந்தில் சிக்சர் அடித்து ஓட்டக்கணக்கைத் ஆரம்பித்தார் தரங்க. தொடர்ந்து முஷ்தபிசுர் ஓவரில் இரண்டு பவுண்டரி விளாச, இலங்கை அணி முதல் 10 பந்துகளில் 21 ஓட்டங்களை எடுத்தது.

பின் மெண்டிஸ், தான் சந்தித்த முதல் பந்தில் 'டக்' ஆகி சரிவை ஆரம்பித்து வைத்தார். அடுத்து தரங்க (27) ஆட்டமிழக்க ாக, டி சில்வாவும் (0) வந்த வேகத்தில் வெளியேறினார். இதன்பின் இலங்கை அணி சரிவில் இருந்து மீளவே இல்லை.

பெரேரா 11, ஷானகா 7 என ஆட்டமிழக்க, அணித் தலைவர் மத்யூஸ் 16 ஓட்டங்களுடன் திரும்பினார். திசர (6) கைவிட்டார். இலங்கை அணி 69 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்தது. சற்று தாக்குப்பிடித்த லக்மலை (20), முஸ்தபிசுர் போல்டாக்கினார். டில்ருவன் அதிகபட்சமாக 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணி 35.2 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்கு சுருண்டது. பங்களாதேஷ் அணி 137 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்றது.

சதமடித்த ரஹீம்

**124** ஆசிய கிண்ண லீக் போட்டியில் நேற்று இலங்கை அணி 124 ஓட்டங்களுக்கு சுருண்டது. இது, ஒருநாள் அரங்கில் பங்களாதேச்க்கு எதிராக, இலங்கை அணி எடுத்த குறைந்தபட்ச ஓட்டஎண்ணிக்கையாக அமைந்தது. இதற்கு முன் 2009ல் டாக்கா போட்டியில் 147 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**32** இலங்கைக்கு எதிராக பங்களாதேஷின் முஷ்பிகுர், ஆரம்ப வீரர் தமிம் இக்பால் ஜோடி 10ஆவது விக்கெட்டுக்கு 32 ஓட்டங்கள் சேர்த்தது. ஒருநாள் அரங்கில் ஆரம்ப வீரர் ஒருவர் 10ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் எடுப்பது இதுதான் முதன் முறை.

இதற்கு முன் அவுஸ்திரேலியாவின் மார்டின் - மெக்ராத் இணைந்து, நியூசிலாந்துக்கு எதிராக 31 ஓட்டங்கள் (2000) எடுத்தனர்.

**144** பங்களாதேஷின் முஷ்பிகுர் நேற்று 144 ஓட்டங்கள் எடுத்தார். ஆசிய கிண்ண தொடரில் ஒரு போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் இரண்டாவது இடத்தை பாகிஸ்தானின் யூனிஸ் கானுடன் (144, எதிர் இலங்கை, 2004) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் இந்தியாவின் ஹோலி (183, எதிர் பாக்., 2012) உள்ளார்

# இப்ராஹிமோவிச் 500



இப்ராஹிமோவிச்

சுவீடன் வீரர் இப்ராஹிமோவிச், ஒட்டுமொத்த கால்பந்து அரங்கில் தனது 500ஆவது கோல் அடித்தார்.

அமெரிக்காவில், உள்ளூர் தொடரான மேஜர் லீக் கால்பந்து (எம்.எல்.எஸ்.,) நடக்கிறது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த லீக் போட்டியில் லொஸ் ஏஞ்சல்ஸ் கலக்ஸி, ரொரன்டோ எப்.சி., அணிகள் மோதின. இதில் ரொரன்டோ எப்.சி., அணி 5-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் லொஸ் ஏஞ்சல்ஸ் எப்.சி., அணிக்கு சுவீடன் வீரர் இப்ராஹிமோவிச் ஒரு கோலடித்தார். இது. ஒட்டுமொத்த கால்பந்து அரங்கில் இவரது 500ஆவது கோல். இதன்மூலம் இவர். தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில் போர்த்துக்கலின் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி ஆகியோருக்கு பின் இந்த இலக்கை எட்டிய 3ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். சுவீடன் அணிக்காக 116 போட்டிகளில் 62 கோல்கள் அடித்துள்ள இப்ராஹிமோவிச், மால்மோ எப்.எப்., அஜக்ஸ், யுவன்டஸ், பார்சிலோனா, ஏ.சி. மிலன், பாரிஸ் செயின்ட் ஜெர்மைன், மன்செஸ்டர் யுனைடெட், லொஸ் ஏஞ்சல்ஸ் கலக்ஸி உள்ளிட்ட கழக அணிகளுக்காக 752 போட்டிகளில் 438 கோல்கள் அடித்துள்ளார்.

# இலங்கை ஆறுதல் வெற்றி

## மிதாலி ராஜின் சதம் வீணானது



மிதாலி ராஜ்

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை பெண்கள் அணி 3 விக்கெட்டுக்களால் ஆறுதல் வெற்றி பெற்றது. மிதாலி ராஜ் சதம் வீணானது.

ஐ.சி.சி., பெண்கள் சம்பியன்ஷிப் தொடருக்காக இலங்கை வந்துள்ள இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற இந்தியா 2-0 என ஏற்கெனவே தொடரை கைப்பற்றி முன்னிலை வகித்திருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி கட்டுநாயக்கவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

**மிதாலி அபாரம்**

இந்திய அணிக்கு ஜெமிமா ரொட்ரிக்ஸ் (0) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய மந்தனா (51) அரைச் சதம் கடந்தார். ஹர்மன் பிரீத் கவுர் (17), தயாளன் ஹேமலதா (6) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய மிதாலி ராஜ் சதம் கடந்தார். தீப்தி சர்மா (38) ஓரளவு கைகொடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்கள் எடுத்தது.

மிதாலி (125), ஜூலன் கோஸ்வாமி (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஆறுதல் வெற்றி**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு ஹாசினி பெரேரா (45) நல்ல ஆரம்பம் கொடுத்தார். ஜூலான் கோஸ்வாமி 'வேகத்தில்' அனுஷ்கா சஞ்ஜீவானி (22), இமால்கா மெண்டிஸ் (12) வெளியேறினர். அசத்தலாக ஆடிய அணித் தலைவர் சமாரி அத்தபத்து ஜெயாங்கனி (115) சதம் கடந்தார்.

கடைசி ஓவரில் இலங்கையின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது. தீப்தி சர்மா வீசிய 50ஆவது ஓவரின் 5ஆவது பந்தில் பவுண்டரி அடித்த கவிஷா தில்ஹாரி வெற்றியை உறுதி செய்தார்.

இலங்கை அணி 49.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (257 ஓட்.,) 3 விக்கெட்டுக்களால் அடைந்து ஆறுதல் வெற்றி பெற்றது.

தில்ஹாரி (12), ஸ்ரீபலி வீரக்கொடி (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 2-1 எனக் கைப்பற்றியது.

**125 ஓட்டங்கள்**

அபாரமாக ஆடிய இந்திய அணித் தலைவர் மிதாலி ராஜ் (125*) சதம் கடந்தார். இதன்மூலம் சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில் ஒரு இன்னிங்சில் தனது அதிகபட்ச ஓட்டங்களை பதிவு செய்தார். இதற்கு முன், 1999ல் அயர்லாந்துக்கு எதிராக 114* ஓட்டங்கள் எடுத்திருந்தது இவரது சிறந்த ஓட்டங்களாக இருந்தது.

# ராஜீவ் காந்தியை பொறியில் சிக்கவைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன

## நட்வர்சிங் நினைவுபடுத்தல்



(டில்லி)

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் வற்புறுத்தலான கோரிக் கையை அடுத்தே, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்பினார் என்று, முன்னாள் அமைச்சர் கே.நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி அமைச்சரவையில் வெளிவிவகார இணை அமைச்சராக இருந்த நட்வர் சிங், அண்மையில் டில்லிக்குச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, கடந்த வியாழக்கிழமை சுப்பிரமணியன் சுவாமி அளித்த இராப் போசன விருந்தில் பங்கேற்றிருந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கோரிக்கையின் பேரிலேயே, இந்தியப் படைகளை ராஜீவ் காந்தி இலங்கைக்கு அனுப்பினார் என்று நட்வர் சிங் டில்லி ஊடகவியலாளர் வெங்கட் நாராயணிடம் இதனை வெளிப்படுத்தினார்.

இந்தியா தனது படைகளை தீய நோக்கங்களுடன் தான் இலங்கைக்கு அனுப்பியது என்று குறிப்பிட்ட ஒரு பகுதியினரிடம் இன்னமும் உள்ள சந்தேகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் நட்வர் சிங் இதன் போது தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி, நரசிம்மராவ் மற்றும் அதிகாரிகளுடன், நட்வர் சிங்கும் அப்போது கொழும்பில் இருந்தார். ராஜீவ் காந்தியின் குழுவுடன் விமானத்தில் ஊடகவியலாளர் வெங்கட் நாராயணும், கொழும்புக்குப் பயணித்திருந்தார்.

அவர் இதுபற்றி கொழும்பு ஆங்கில நாளிதழில் வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில், இதுபற்றி விபரித்துள்ளார்.

"ராஜீவ் காந்தியின் விமானம் கொழும்பில் தரையிறங்கிய போது, நிலைமைகள் பதற்றமாக இருந்தன. கொழும்பு எரிந்து கொண்டிருந்தது.

ராஜீவ் காந்தியின் குழுவில் இருந்த அனைவரும், உலங்குவானூர்தி மூலம், காலிமுகத்திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தாஜ் சமுத்ரா விடுதியில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், இந்திய-இலங்கை உடன்பாட்டில் கையெழுத்திட்ட நிகழ்வை, இலங்கை அமைச்சரவையில் இருந்த பலர் புறக்கணித்தனர்.

அப்போது தான், இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்துக்கு செல்வது பற்றி நட்வர் சிங் முதன் முதலாக கேள்விப்பட்டார். அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர் உடனடியாக, தமது மூத்த அமைச்சரான - நரசிம்ம ராவிடம், இலங்கைக்குப் படைகளை அனுப்புவது பற்றி அமைச்சரவையில் ராஜீவ்-காந்தி விவாதித்தாரா என்று கேட்டார்.

அப்போது நரசிம்மராவ், இல்லை என்று பதிலளித்தார். உடனடியாக நட்வர் சிங் அதுபற்றி ராஜீவ் காந்தியிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு ராஜீவ் காந்தி தனக்கு அளித்த பதிலை நட்வர் சிங் நினைவு கூர்ந்தார்.

"உடன்பாடு கையெழுத்திட்டவுடன், ஜெயவர்த்தன என்னை அணுகினார். முற்றிலும் அச்சமும், பீதியும் நிறைந்த குரலில் அவர், இன்றிரவு ஒரு சதிப்புரட்சி நடக்கப் போகிறது.

எனக்கு உங்களின் உதவி தேவைப்படுகிறது. உடனடியாக உதவிக்கு வராவிட்டால், நிலைமைகள் கையை மீறிப் போய் விடும்" என்று ஜே.ஆர். கூறினார் என ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

அப்போது, டில்லியில் இருந்த பாதுகாப்பு அமைச் சரை அழைத்து, யாழ்ப்பாணத்துக்கு இந்தியப்படையினரை விரைந்து அனுப்பு மாறு கேட்கும்படி என்னிடம் ராஜீவ் காந்தி கூறினார்" என்று நட்வர் சிங் நினைவு படுத்தினார்.

அப்போது அமைச்சரவையில் விவாதிக்க நேரம் இருக்கவில்லை. இந்தியப் படைகளை சண்டையிடும் ஒரு இராணுவ நடவடிக்கைக்கு ராஜீவ் காந்தியை ஈடுபடுத்துவதற்கு, இந்திய- இலங்கை உடன்பாட்டின் ஒரு விதியை ஜே.ஆர்.ஜெய வர்த்தன பயன்படுத்திக் கொண்டார்.

இதற்கமைய, தமிழ் போராளிக் குழுக்களின் ஆயுதங்களைக் களையும் நோக்கில், 1987 ஜூலை 30ஆம் திகதி அதிகாலையில் இந்திய அமைதிப்படை என்ற பெயரில், இந்தியத் துருப்புக்கள் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்தன என்று டில்லி ஊடகவியலாளர் வெங்கட் நாராயணன் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்து தமிழ் மக்கள் மீது அட்டூழியங்களை அவிழ்த்துவிட்ட நிலையிலேயே ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# மகிந்த கடந்த பட்ஜெட்டுக்கு மறைமுக ஆதரவு வழங்கினார்

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள புதிய வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு தமக்கு அழைப்பு விடுக்க முன்னர் அது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் கேட்டுப் பார்க்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நல்லாட்சி அரசாங்கம் இதற்கு முன்னர் கொண்டு வந்த வரவு-செலவுத் திட்டத்திலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்களிப்பிலிருந்து தவிர்த்து கொண்டார்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி தனது வாக்குகளைப் பயன்படுத்தும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ-7)


ETF

தொழில் வழங்குநர்களுக்கான முக்கிய அறிவித்தல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

ஆர் 1 (R1) பணம் அனுப்புதல் மற்றும் ஆர் 4 (R4) பணம் கிடைக்கப்பெற்றதை உறுதிசெய்தல்

பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிகக் கட்டணங்களுக்காக தொழில் வழங்குநர்களினால் பணம் அனுப்பும் கட்டளைப் படிவத்துடன் அனுப்பப்படும் பிரதிகள் 2018 ஜூலை மாதம் முதல் மீண்டும் திருப்பி அனுப்பப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அரையாண்டு கொடுப்பனவு சாராம்சமொன்று தபால் மூலம் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மாதாந்த புணம் செலுத்தல்கள் பற்றிய உறுதிப்படுத்தல் அவசியமெனின் ஊ.ந.பொ.நி. சபையின் பிரதான அலுவலகம் / பிராந்திய அலுவலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

பிராந்திய அலுவலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு கோட்டை | 011-2321184 | ஹட்டன் | 051-2223840 |
| கொழும்பு 1-7 | 011-2368616 | அனுராதபுரம் | 025-2222185 |
| கொழும்பு 8-15 | 011-2369698 | மாத்தறை | 041-2231877 |
| கொழும்பு மாவட்டம் | 011-2806834 | பதுளை | 055-2224482 |
| கேகாலை | 035-2222991 | யாழ்ப்பாணம் | 021-2220010 |
| கம்பஹா | 033-4922530 | குருநாகல் | 037-2228194 |
| களுத்துறை | 034-2237722 | காலி | 091-2245814 |
| கண்டி | 081-2233793 | ஹம்பாந்தோட்டை | 047-2222460 |
| இரத்தினபுரி | 045-2222529 | அம்பாறை | 063-2222845 |
| நுவரெலியா | 052-2224457 | வவுனியா | 024-2228225 |

பிரதான அலுவலகம்

பிரதிப் பொது முகாமையாளர்
(சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள்)
0112504982

உதவிப் பொது முகாமையாளர்
(பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் மேலதிகக் கட்டணம்)
0112503911

நிதி முகாமையாளர்
(பங்களிப்புத் தொகை சேகரிப்பு)
0112368160 / 0112368508

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,
தொழில் செயலகம், கொழும்பு 05.

dgmenrd@sltnet.lk www.etfb.lk

திகதி: 2018/08/20





யாழ்ப்பாணம் வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகப் பிரிவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மக்கள் சேவை நடமாடும் சேவை இடம்பெற்றது. யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ தலைமையில் இந்த நடமாடும் சேவை ஆரம்பமானது. ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் பிரதமரின் வழிகாட்டலில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.டி.கொடிகார, மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் திறைசேரியின் மேலதிக ஆணையாளர் நாயகம், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.ஏ.சுமந்திரன், ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- சக்தி)




பருத்தித்துறை கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கோட்டமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் கலப்பு அணி பிரிவில் யா/ கெருடாவில் இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலை தரம் 5 பிரிவிலும் தரம் 3 பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம் (Short Course in Human Resource Management), நிதி முகாமைத்துவம் (Short Course in Financial Accounting), சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (Short Course in Marketing Management), மனிதவள பயிற்சியும் அபிவிருத்தியும் (Short Course in Human Resource Training and Development) மற்றும் அலுவலக முகாமைத்துவத்திற்கான (Short Course in Office Management) குறுகியகாலக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக் கற்கை நெறியானது மூன்று மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக் கற்கை நெறிக் குரிய விண்ணப்பப் படிவங்களைஎதிர்வரும்09.10. 2018 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற் றுக் கொள்ளலாமெனவும் மேலதிக விபரங்களுக்கு யாழ். பிராந்திய நிலையத்திற்கு வருகை தரு வதன் மூலமோ அல்லது 021 222 3374 எனும் தொலை பேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)


## அறைகள் வாடகைக்கு

கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் மாபிள் பதித்த சிறிய குடும்பத்திற்கேற்ப அறைகள் வாடகைக்கு உண்டு. (சு-3847)

தொடர்புகளுக்கு: 077 108 3483


## விசேட தேவையுடைய பெண்ணிற்கு ரூ.40 ஆயிரம் காசோலை வழங்கல்



(கரணவாய்)

விசேட தேவையுடைய பெண் ஒருவருக்கு மூன்று சில்லு சைக்கிளுக்கு மோட்டர் பொருத்துவதற்கான பற்றரி கொள்வனவு செய்வதற்காக 40 ஆயிரம் ரூபாவிற்கான காசோலை வழங்கப்பட்டது. போரின் போது கணவனை இழந்த மேரி றோக்சி என்னும் குடும்பப் பெண் தனது பிள்ளையுடன் பருத்தித்துறை நான்காம் குறுக்குத் தெருவில் வசித்து வருகிறார்.

அவர் தனது மூன்று சில்லு சைக்கிளை கையால் இயக்க முடியாமையால் மோட்டர் பொருத்து வதற்கு பற்றரியை பெற்றுத்தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய அவரின்பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 40 ஆயிரம் ரூபா நிதிக்கான காசோலை நேற்று முன்தினம் சனிக்கிழமை கரவெட்டி பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டது. (இ-7)

## சிறப்புப் பட்டிமன்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் வல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கில் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வில்இன்று இரவு 8 மணியளவில் பருத்துறை செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சொல்வேந்தர் பொன். சுகந்தன் தலைமையில் இடம் பெறும். இதில் அகில இலங்கை இளங்கோ கழகம்வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் மொழியும் வள்ளல், பரா ரதீஸ் தலைமையில் இடம்பெறும். (இ)


ஸ்ரீராம ஜெயம்



## இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
## வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018
## 13.09.2018 முதல் 22.09.2018 வரை

17.09.2018 இன்று திங்கட்கிழமை

ஐந்தாம் நாள் நவநீதகிருஸ்ணர்

**வயலின் இசை ஆராதனை:**

வயலின்-சு.கோபிதாஸ், சு.துவாரகி

மிருதங்கம்- ம.லோகேந்திரன்

கடம்- கு.ரவிசங்கர்

தபேலா- பா.கபிலன்

முகர்சிங்- சி.செந்தூரன்

021 224 2300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

(5652)


## இராசி பலன்

**மீனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**இடபம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி<br>காலை 9.03 மணிக்கு<br>தனுசு-சந் | | ராகு |
| செவ்.<br>கேது | | | |
| சனி | சந் | குரு<br>சுக் | சூரி<br>புத |

17.09.2018

புரட்டாதி 01, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 06.04 மணிக்கு

அட்டமி முன்னிரவு 8.59 மணிவரை

கேட்டை முற்பகல் 09.02 மணிவரை

சுபநேரம் 12.03-1.33 மணிவரை

இராகுகாலம் 7.33-9.03மணிவரை

வளவன்

**கடகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**மகரம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்தகாரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம்.


**தனுசு:** கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு,புதிய நட்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** உடன் பிறப்புக்களின் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 | 14 |
| 11 | 09 |
| 1935 | 2018 |

# திருமதி இராசரத்தினம் கனகம்மா

நாற்றர்தோட்டம் கரணவாய் மேற்கு கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் கனகம்மா அவர்கள் 14.09.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிக்குட்டி-தெய்வானை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமிப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஒய்வு பெற்ற ஊழியர், ஊறணி வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி (அமரர்), பரமேஸ்வரி (அமரர்), பாக்கியம் (அமரர்), புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

குணராணி (லண்டன்), கனகலிங்கம் (சுவிஸ்), கனகராணி (சுவிஸ்), குணரட்ணம் (கனடா), வரதராணி, கேதீஸ்வரி( கனடா), குலசிங்கம் (சுவிஸ்), கமலேஸ்வரி (கனடா), சிவகுமார்(கனடா), இராசகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்

கந்தசாமி பூபதி (சுவிஸ்), பரமேஸ்வரன் (சுவிஸ்), தெய்வராணி (கனடா) ,சிவஞானசுந்தரம் (அமரர்), சிவநேசன் (கனடா), சுபாசினி(சுவிஸ்), நாராயணஞானம் (கனடா), சர்மிளா(கனடா). சுபாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்

நகுலேஸ்வரி, காலஞ்சென்ற சிவசாமி, நாகராசா, மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இந்திரன், வேணுகா (லண்டன்), கவிதா-செல்வராசா, கௌமதி-ரத்தினராசா, (லண்டன்), கௌரி- சிவபாலன் (லண்டன்), பிரதீப் (சுவிஸ்), பிரசாந் (சுவிஸ்), பிரசோன் (சுவிஸ்), கௌசலன் (பிரான்ஸ்), கௌதமன்-மயூரி (சுவிஸ்), கௌசல்யா-சிவா (பிரான்ஸ்) கௌதமி-வசந்தன், நிர்சன் (கனடா),நிவேதா (கனடா), சிவரஞ்சனி-கிருஷ்ணகுமார், சிவரஞ்சன் (கனடா), பவிதா (கனடா), பிரணவி(கனடா), றாகவி(கனடா), பிரியங்கா (சுவிஸ்), மிகாயா (சுவிஸ்), ரேத்தன் (சுவிஸ்), கார்த்தீபன்(கனடா), கார்த்தீபா (கனடா), பிரவீனா(கனடா), ஜெனோ(கனடா), சைனோ (கனடா), மெர்னி(கனடா), யதுண் (லண்டன்), கபிசா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்

மதுசா (லண்டன்), டிதுகா(லண்டன்), கிசானா(லண்டன்), டிலக்ஷி, கஜந்திகா, சரணிகா, ரகுசன் (லண்டன்),ரதுசா (லண்டன்,) சயானா (லண்டன்), சந்தோஸ் (லண்டன்),சகானா (லண்டன்), அக்ஷிகா (சுவிஸ்), சிபிசன் (பிரான்ஸ்), சமீனா (பிரான்ஸ்), அஸ்னா(பிரான்ஸ்), விதுசா, அபிசா, ஜெகுஷா, சமிஷன், ஆகியயோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.09.2018 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம் திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-3855)

நாற்றர் தோட்டம்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

தொலைபேசி இல.
021 205 6291

தகவல் :
குடும்பத்தினர்

# வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறல்

## முல்லை. கடற்றொழில் திணைக்களம் முன்பாக மீனவர்கள் இன்று போராட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத சுருக்கு வலைக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று திங்கட்கிழமை மீனவர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்களத்திற்கு முன்பாக வாயில் கறுப்புத் துணியைக் கட்டி அமைதியான முறையில் எதிர்ப்பை மேற்கௌள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவில், சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக மீனவர்கள் கடந்த மாதம் 2ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மீனவர்களின் தொடர் போராட்டத்தையடுத்து, இந்த பிரச்சினை தொடர்பாக கடந்த மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மீன்பிடி அமைச்சர் விஜயமுனி சொய்சா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் மீனவ சார்பாளர்களுடன் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

அந்த கலந்துரையாடலையடுத்து சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் முல்லைத்தீவில் செய்ய முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி தொழிலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தற்போது ஆறு வாரங்களுக்கு தற்காலிகமாக சட்டவிரோத சுருக்கு வலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற தகவல் ஒன்று அறியக் கிடைக்கின்றது.

இந்த உத்தியோகபூர்வமற்ற தகவல் கிடைத்தவுடன் சிலர் முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து முல்லைத்தீவு மீனவர்கள் நூறு பேர் அளவில் கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில், முல்லைத்தீவு - கள்ளப்பாடு, அந்தோனியார் தேவாலயத்தில் ஒன்று கூடியிருந்தனர். மீனவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்திருந்தார்.

மீனவர்களின் குறித்த ஒன்று கூடலில், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளதாக மீனவர்கள் பலரும் கவலை தெரிவித்தனர். மேலும் இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்களத்திற்கு முன்பாக வாயில் கறுப்புத் துணியைக் கட்டி அமைதியான முறையில் எதிர்ப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (2-281)

## அறநெறி பாடசாலை ஆரம்பிப்பும் உதவித் தொகை வழங்கலும்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, கிழக்கில் சரசுவதி அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டிருந்தார். அதனையடுத்து ஒருவருக்கு சிறிய அளவிலான உதவித் தொகை ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

சரசுவதி மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி.வேலும்மயிலும் சிறிரஞ்சனி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வானது, அண்மையில் சரசுவதி முன்பள்ளியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சரசுவதி அறநெறிப் பாடசாலைச் சிறார்களுக்கு புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் கந்தப்பிள்ளை திலீபனின் நிதியுதவியில் கற்றல் கருவிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேசுவரன், இ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் புலம்பெயர் வாழ் உறவான கந்தப்பிள்ளை திலீபனினால் முள்ளியவளை பகுதியில் கணவனை இழந்து வாழும் பெண்மணி ஒருவருக்கு 5 ஆயிரம் உதவு தொகையும், வழங்கப்பட்டது.

குறித்த உதவித் தொகையை வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் லோகேசுவரன் ஆகியோர் கையளித்தனர். (2-281)




## ஓய்வுநிலை மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமியுங்கள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

(குருமன்காடு)

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்க ஓய்வுநிலை மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் குறிப்பாக பிரதேச சபைகள் போதிய வருமானமின்றி பொது மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இதற்கு காரணம் ஆதன வரி அறவீடு சரியாக நடைபெறுவதில்லை.

நீண்டகாலமாக பிரதேச சபைகளின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆதன மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. போதிய மதிப்பீட்டாளர்கள் பணியில் இல்லையென்பதாக காரணம் சொல்லப்படுகின்றது.

எனவே ஓய்வுநிலை மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து மதிப்பீட்டு பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

வவுனியா பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வீட்டுத்திட்டம் வழங்கலில் வீடற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும். அதற்கு அடுத்ததாக ஏற்கனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் நீண்டகாலத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட அரை நிரந்தர வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்க ஆதனவரி மதிப்பீட்டு பணிகளை துரிதப்படுத்தல், வேண்டும். மதிப்பீட்டாளர்கள் பற்றாக்குறையை நீக்க ஓய்வு பெற்றவர்களை பணிக்கு அமர்த்த வேண்டும்.

ஓமந்தையில் அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் இதுவரை எந்த விதமான அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளாதவர்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கி காணிகளை அபிவிருத்தி செய்ய பணிப்புரை வழங்கப்படல் வேண்டும்.

தவறும் பட்சத்தில் காணிக்காக காத்திருப்போர் பட்டியலில் பொருத்தமான பயனாளிகளை தெரிவுசெய்து அவர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கவேண்டும். காணியற்றவர்களுக்கு புதிதாக காணிகள் வழங்கும்போது குடியிருப்பதற்காக வழங்கப்படும்.

மேட்டுக்காணிகளுக்கு மேலதிகமாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்து வயற்காணிகள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இதற்கு வனவளத்திணைக்களம் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும் எனவும் தனது முன்மொழிவுகளை வழங்கியிருந்தார். (2-250)

## மாணவர்களின் குடிநீர் தட்டுப்பாட்டிற்கு மாற்றுவழி

(பனிக்கன்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு மாற்று வழி செய்யப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கிணற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்த குடிநீர் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியுடனான காலநிலை காரணமாக வற்றிப் போயுள்ளது.

இதையடுத்து மாணவர்களுக்கு குடிநீர் உட்பட ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் அதிபர் த.அமிர்தலிங்கத்திடம் இவ்விடயம் தொடர்பாக வினவிய போது தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு தற்போது கிணற்றில் தண்ணீர வற்றிப்போயுள்ளது.

எனினும் மாற்று வழிகள் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்குத் தட்டுப்பாடுகள் இன்றி குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் மாணவர்களுக்கு குடிநீருக்கான தட்டுப்பாடுகள் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை; வர்த்தக உரிமையாளர்களுக்கு அழைப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கி தொழில் புரியும் ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்கள் தமது குடும்பத்தினருடன் இன்புற்றிருக்க அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் ஒன்றிணைந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டு அழைப்பு விடுத்துள்ளனர்.

வவுனியா வர்த்தகர் சங்கத்தினரால் கடந்த திங்கட்கிழமை முதல் அனைத்து வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த உரிமையாளர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இதன்போது மேற்படி தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்களும் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா வர்த்தகர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா நகரிலுள்ள ஹாட்வெயார், நகைக்கடை, அழகுசாதனம் விற்பனை நிலையம், தொலைபேசி விற்பனை நிலையம், புடைவைக்கடை நிலையம், மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையம், சி.டி விற்பனை நிலையங்கள் என்பனவற்றின் உரிமையாளர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இக்கலந்துரையாடலில் வவுனியா பொலிஸ் உயர் அதிகாரிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினர், நகரசபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலின் இறுதியில் அனைத்து வர்த்தகப் பிரமுகர்களும் ஒன்றிணைந்து ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை வழங்குவது என்று ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)

### முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில்

# நோயாளர்களை மயக்க நிலையில் வைத்திருக்கும் இயந்திரம் பழுது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நீண்ட கால மாக திட்டமிட்டு திகதி கொடுக்கப்பட்ட சத்திரசிகிச்சைகள் கடந்த 5ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால பல மாதகாலம் சத்திரசிகிச்சைகளுக்காக காத்திருந்த நோயாளிகள் பெரும் சிரமத்தை அடைந்துள்ளார்கள்.

இதுபற்றி வைத்தியசாலை நிர்வாகத்திடம் வினவியபோது, சத்திரசிகிச்சையின் போது நோயாளர்களை மயக்க நிலையில் வைத்திருப்பதற்காக பயன்படுத்துகின்ற இயந்திரம் ஒன்று கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பழுதடைந்த நிலையில் இன்னும் திருத்தப்படாமல் உள்ளது.


கையிருப்பில் உள்ள ஒரு இயந்திரத்தை மட்டும் பயன்படுத்தி அவசர சத்திரசிகிச்சைகளையும் திட்டமிட்ட சத்திரசிகிச்சைகளையும் சமநேரத்தில் செய்யமுடியாத காரணத்தினால் மயக்கமருந்து கொடுக்கும் வைத்திய பிரிவு சத்திரசிகிச்சைகளுக்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

இந் நெருக்கடி நிலையை உடனடியாக தற்காலிகமாகவேனும் தீர்ப்பதற்கு அயல் வைத்தியசாலைகளிலிருந்து கடன் அடிப்படையில் அவ் வியந்திரத்தை பெறமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மயக்க நிலையைப் பேண வழிவகுக்கின்ற அவ்வாறான ஒரு இயந்திரம் புதிதாக பெட்டி உடைக்கப்படாத நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் கடந்த ஒருவருடமாக பாவிக்கப்படாத நிலையில் இருப்பதை அறிந்து அதைக்கொண்டுவர வைத்திய சாலையில் அதிகாரிகள் முயன்றுள்ளனர்.

இருந்தும் மக்கள் பிரதிநிதிகளின் தலையீட்டால் அதைத் தருவதற்கு மல்லாவி வைத்தியசாலை நிர்வாகத்தால் முடியவில்லை. (2-315)








2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நிகழ்ந்ததன் பிற்பாடு கிளிநொச்சியினுடைய கலாசார பண்பாட்டு மண்டபம் மற்றும் சந்திரன் பூங்கா ஆகிய பகுதிகளில் பொலநறுவை காலப்பகுதிக்குரியது என குறிப்பிடப்படுகின்ற மிக தொன்மை வாய்ந்த கற்களைக் கொண்டு படையினரால் அமைக்கப்பட்ட மதில்கள் நேற்றைய தினம் கரைச்சி பிரதேச சபை நடவடிக்கையால் இடித்து அகற்றப்பட்டது.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடந்த 03 வருடங்களாக தொடர்ச்சியாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் இவற்றை அகற்றுமாறு கோரிக்கை விடுத்து வந்தார். இதனை அடுத்து நேற்று இவ் வேலை மேற்கொள்ளப்பட்டது. ( 2-312)

## மகாவிஷ்ணு ஆலய பிரமோற்சவம்





(குருமன்காடு)

வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீமஹா விஷ்ணு தேவஸ்தானத்தின் பிரமோற்சவ பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிவஸ்ரீ முத்து இரத்தின வைத்தியநாத குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதன்படி பத்து தினங்கள் இடம்பெறவுள்ள பிரமோற்சவத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்த் திருவிழாவும், எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்த திருவிழாவும், மறுநாள் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது . (2-250)

### விசமிகள் மூட்டிய தீயினால்

# தென்னை, பனைமரங்கள் தீயில் எரிந்து கருகின



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி சிவிற் சென்ரர் பகுதியில் விசமிகள் மூட்டிய தீயினால் பெருமளவான பயன்தரும் தென்னை மற்றும் பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

ஆட்கள் நடமாட்டம் இல்லாத தோட்டக்காணியில் விசமிகளால் கடந்த 14 ஆம் திகதி மூட்டப்பட்ட தீயினால் பெருமளவான பயன்தரு தென்னை மற்றும் பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. (2-315)

## பொதுமக்களின் கடும் எதிர்ப்பையடுத்து ஆலய நிர்வாகத்தினரால் பூசகர் வெளியேற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் சிறுவனைக் கடத்திச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கிய பூசகர் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையடுத்து நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளார்

கிளிநொச்சி கோரக்கன்கட்டு பகுதியில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் திருவிழா பூசைக்காக கிளிநொச்சி நகரிற்கு அண்மையிலுள்ள ஆலயம் ஒன்றில் பூசை செய்து வந்த பூசகர் ஒருவர் அழைக்கப்பட்டு பூசைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் ஆலயத்திற்கு பூசை செய்வதற்கு வந்த குறித்த பூசகர் அப்பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவனை தன்னுடைய மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்று அங்கு அறையொன்றில் நாள் முழுவதும் பூட்டி வைத்து பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதால் பாதிக்கப்பட்ட சிறுவன் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவன் நடந்த சம்பவத்தை பெற்றோருக்கும் அயலவர்களுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து பூசகரை பாதுகாக்கும் நோக்கிலும் பூசைக்காக நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பூசகருக்கு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்து அவரைப் பாதுகாக்கும் வகையில் ஆலய நிர்வாகம் செயற்பட்டதையடுத்து பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் பூசகர் நேற்று முன்தினம் மாலையுடன் நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளார்

இதேவேளை பாதிக்கப்பட்ட சிறுவன் தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

### ஏழு ஆண்டுகளாக

## தற்காலிக வீடுகளில் வசித்து வருகின்றோம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை வீட்டுத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளாது தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து மீள்குடியேறிய 13 ஆயிரம் வரையான குடும்பங்கள் தமக்கான வீட்டுத்திட்டங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாது கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிகமான வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

கடந்த 2009, 2010 ஆம்ஆண்டுகளில் மீள்குடியமர்வின் போது அப்போது ஆறு மாத காலத்திற்கு என வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளில் கணிசமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறான வீடுகள் மிக மோசமாக சேதமடைந்து மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன. எனவே தமக்கான வீட்டுத் திட்டங்களை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் தற்காலிக தகரப்பந்தல் தொகுதி வழங்கல்



(கண்டாவளை)

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் மூலம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அறத்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தற்காலிக தகரப்பந்தல் தொகுதி வழங்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் வேண்டுகோளிற்கு இணங்க பாராளுமன்ற உறுப்பினரால்நிதி ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பொருட்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அறத்தி நகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வசந்தமோகனிடம் அண்மையில் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிராம பொது அமைப்புக்கள் மற்றும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உறுப்பினர் வீரவாகு தேவர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2018 - 17.10.2018



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சுக ஸ்தானத்தில் இராசிநாதன் புதன் வலிமையிழந்து சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் இருக்கும் சனி, கண்டகச் சனியாக இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். உடல் நலனுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். உடன் இருப்பவர்களுக்காகவும் ஒரு தொகையை செலவிட வேண்டியதிருக்கும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சிகளில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், திடீர் திடீரென மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களின் மூலமும் பிரச்சினைகள் வரலாம். உடன் இருப்பவர்கள் மூலமும் பிரச்சினைகள் உருவாகலாம். எனவே எதைச் செய்தாலும் அதன் பின் விளைவுகளைச் சிந்தித்துச் செய்வது நல்லது. 2இல் ராகுவும், 8இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கமும் மேலோங்கி இருக்கிறது. ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கையாகவே இந்த மாதம் உங்களுக்கு அமையலாம். உங்களுக்கு யோகம் தரும் நாளில், நாக ஸ்தலங்களுக்குச் சென்று முறையாக ராகு-கேதுகளுக்கு பிரீதி செய்வதன் மூலம், துன்பங்களில் இருந்து விடுபட முடியும்.

இம்மாதம் மாபெரும் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. ஆனால் அந்த குருபகவான் 6ஆம் இடத்திற்கு அல்லவா வருகிறார். 'ஆறில் குரு ஊரில் பகை' என்பார்கள். எனவே எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடி செய்ய இயலாது. திடீர் மாற்றங்கள் வந்துகொண்டே இருக்கும். உத்தியோக மாற்றம் விரும்பத் தக்கதாக அமையுமா? என்பது சந்தேகம் தான். எதிர்பார்த்த காரியங்களில் ஏமாற்றம் கிடைக்கலாம். குரு, உங்கள் இராசிக்கு 7, 10இற்கு அதிபதியாகி கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் என்பதால், மறைவிடத்திற்கு வரும் பொழுது அரைப்பங்கு நன்மையைச் செய்வார். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலக குருவிற்குரிய சிறப்புப் பரிகாரங்களை குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே செய்து கொள்ளுங்கள்.

### துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், உச்சம் பெற்று சஞ்சரித்தாலும், அஸ்தமன நிலையில் இருக்கிறார். அவர் ஒக்டோபர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக பூர்வீகச் சொத்துகளால் இலாபம் கிடைக்கும். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும். தொழில் வளர்ச்சியிலும், கடமையைச் செய்வதிலும் இருந்த குறுக்கீடு அகலும். பூமி விற்பனையால் ஒரு பெரும் தொகை கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்




அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பை கருதி சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒக்டோபர் 4ஆம் திகதி புதன் பலம்பெற்று சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் பலன்கள் கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சிப் பலன்கள்

ஒக்டோபர் 4ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்ப்புகள் அதிகரிக்கலாம். வழக்கு முடிவுகள் சாதகமாக வந்து சேரும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்துச் செய்வது நல்லது.

## வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்!

உத்தியோகம் சம்பந்தமாக புது முயற்சிகள் செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள், வாகன மாற்றங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் இடத்தில் ஏற்படும் பிரச்சினைகளை நண்பர்களின் மூலம் சமாளித்து விடுவீர்கள். மருத்துவச் செலவு அதிகரிக்கலாம். உயர்பதவியில் உள்ளவர்களுக்கு பதவி மாற்றங்கள் தானாக வந்து சேரும்.

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

ஒக்டோபர் 11ஆம் திகதி துலாம் இராசியில் சுக்கிரன் வக்கிரம் பெறுகிறார். இக்காலத்தில் பூர்வீகச் சொத்து தகராறுகள் தலைதூக்கும். பிள்ளைகளால் விரயம் ஏற்படும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. வாங்கிய ஆபரணங்களை விற்க நேரிடலாம். பெண்தெய்வ வழிபாடுகளை, முறையாக மேற்கொள்வதன் மூலம் முன்னேற்றப் பாதையில் உள்ள தடைகள் விலகும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டையும், வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் சப்தம சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. பக்கத்து வீட்டார் பகையாக மாறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். கணவன்-மனைவி இருவரும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, தீட்டிய திட்டங்களுக்காக கொஞ்சம் செலவிட வேண்டியதிருக்கும். பெற்றோர் வழியில் ஆதரவு ஓரளவு கிடைக்கும். இம்மாதம் நிகழும் குருப்பெயர்ச்சியால், குரு இருக்கும் இடத்தை விட, பார்க்கும் இடங்களால் பலன் உண்டு. குடும்ப ஸ்தானத்தைப் பார்ப்பதால் குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். சனி கவசம் பாடி சனியை வழிபடும் அதேவேளையில், குரு கவசம் பாடி குருவையும் வழிபடுங்கள்.



விளம்பி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே சர்ப்பக் கிரகம் எனப்படும் ராகு இருக்கிறது. சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கிறார். எனவே வாழ்க்கைத் துணை மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அனுசரித்துச் செல்வதன் மூலமே குடும்பத்தில் அமைதி கிடைக்கும். தேக்க நிலையில் இருந்த வழக்குகள் இனி சாதகமாக மாறலாம்.

வியாபாரத்தில் பிறருடைய தவறான வழிகாட்டுதலினால், இதுவரை கொஞ்சம் விரயங்களைச் சந்தித்திருப்பீர்கள். வியாபாரத்தில் விரோதிகளும் அதிகமாகியிருப்பார்கள். அந்த நிலை இனி மாறும். பஞ்சமாதிபதியாகவும், தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியானதுடன், உச்சம் பெற்றும் விளங்குகிறார். எனவே தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்தில் கணிசமான இலாபம் கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்ய நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு, அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலங்கள் கிடைக்கும். சொத்துகள் சார்ந்த வழக்குகளில் சாதகமான தீர்ப்பு வரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு.

சனியின் சஞ்சாரமும் சாதகமாகவே உள்ளது. 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி, தற்சமயம் வக்கிர நிவர்த்தியாகி 6ஆம் இடத்தில் குருவின் வீட்டில் சஞ்சரிக்கிறார். எனவே உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். மேலதிகாரிகள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவர். இதனால் வேறு வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற உங்களின் எண்ணத்தைக் கூட மாற்றிக்கொள்வீர்கள்.

### துலாம் இராசியில் புதன்

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் புதன், ஒக்டோபர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்கிறார். ஒக்டோபர் 4ஆம் திகதி அங்கேயே வலிமை அடைகிறார். மேலும் துலாம் இராசியில் இருக்கும் சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இதனால் உங்களின் ஆரோக்கியம் மேம்படும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவார்கள். வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு கைகூடும். தாயின் உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படும். உயர்படிப்பில் ஈடுபட்டிருக்கும் மாணவர்கள், கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக் கசப்பு மாறி உறவு பலப்படும்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து, அர்த்தாஷ்டம குருவாக விளங்கிய குரு பகவான், ஒக்டோபர் 4ஆம் திகதி விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்படி பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் குரு, உங்களுக்கு பல




விதங்களிலும் நன்மையை வழங்கப் போகிறார். குருவின் பார்வையால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இல்லறம், நல்லறமாக வழிவகுக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட பிணக்குகள் அகலும். கூட்டுத் தொழில் செய்பவர்கள், தனித்து இயங்க முன்வருவார்கள். ஆற்றல் மிக்கவர்களின் அறிமுகம் கிடைத்து, பார்க்கும் தொழிலில் பணவரவை பெருக்கிக் கொள்வீர்கள். வீண் பழிகள் அகலும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

## இனி வசந்த காலம் தான்!

### சுக்கிரனின் வக்கிர இயக்கம்

ஒக்டோபர் 11ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன் வக்கிரம் பெறுகிறார். வக்கிரம் பெற்றாலும், அவர் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படாது. இருப்பினும் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துவது நல்லது. ஜீரணக் கோளாறு, நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். குடும்பத்தில் உறவினர்களிடம் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை வாக்குவாதம் செய்யாமல் சமாளிப்பது நல்லது. சுக்கிரனின் வக்கிர காலத்தில், தொழில் செய்வதற்காக ஒருசிலருக்கு கடன் வாங்கும் சூழல் உருவாகலாம். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபடுவதன் மூலமும், செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கையை வழிபடுவதன் மூலமும் நன்மையை வரவழைத்துக் கொள்ளலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் மாதம் இதுவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். மன பயம் மாறி, மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துவீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் முழுமையாக நீங்கும். சுபகாரியங்கள் கைகூடும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு மிகச்சிறந்த பலன் கிடைக்கும். வர வேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து மகிழ்ச்சிப்படுத்தும். வியாழக்கிழமை குருவை வழிபடுவதோடு சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்வதன் மூலமும் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)



தீவகம் வேலணை வங்களாவடியில் தியாகதீபத்தின் நினைவுநாள் நினைவேந்தலின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த போராளி காக்கா அண்ணனின் (முத்துக்குமார் மனோகர்) பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# கல்விக் கண்காட்சி நாளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்.கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான கல்விக் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-30)

# பிரதேச சபை அலுவலர் தாலிக்கொடி பறிப்பு!

(கொழும்பு)

நாவிதன்வெளி பிரதேச சபை பெண் அலுவலரின் தாலிக்கொடியை வழிப்பறிக் கொள்ளையர்கள் பறித்துச்சென்றுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ள குறித்த சம்பவத்தின் போது சுமார் 10 பவுண் தங்கத் தாலிக்கொடியே பறித்துச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாவிதன்வெளி பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கட்மையாற்றும் பெண் ஒருவர், அவர் கடமையாற்றும் அலுவலகத்திலிருந்து நாவிதன் வெளியிலுள்ள தனது வீட்டிற்குச் சென்று விட்டு மீண்டும் அலுவலகத்திற்கு கடமைக்காகச் செல்லும்போது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அவரை வழிமறித்துள்ளனர்.

இதன்போது, சற்றும் எதிர்பாராத விதத்தில் கணப்பொழுதில் கொள்ளையர்கள் மிக இலாவகமாக குறித்த பெண் கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# புதிய அரசியலமைப்பு நிறைவேற வேண்டும்

## இல்லையேல் பாரிய விளைவு ஏற்படும்-சுமந்திரன்

(கரணவாய்)

புதிய அரசியல் அமைப்பு விடயத்தில் எமது முயற்சி பலனளிக்காது விட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடக பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன் எச்சரித்தார்.

கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டிற்குள்ளே எங்களுக்கான தீர்வைப் பெறுவோம் என்ற நிலைப்பாட்டிலேயே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் இணங்கி செயற்பட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசுடன் பேச்சு நடத்திய காலத்திலே அப்படியான தீர்மானங்களையே வெளிப்படுத்தினார்கள்.

புலிகளின் தலைவர் 2001, 2002 ஆகிய ஆண்டுகளில் நவம்பர் மாதம் ஆற்றிய உரையிலே சுயநிர்ணய அடிப்படையிலே ஓர் தீர்வு வருமாக இருந்தால் அதனை நாங்கள் பரிசீலிக்க தயார் எனக் கூறியிருந்தார்.

அதன் அடிப்படையில் 2002 இல் ஒஸ்லோவில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுத்துள்ளோம்.

நாங்கள் சுயநிர்ணயத்தோடு வாழ்கின்ற மக்கள். சர்வதேசத்திலே சுயநிர்ணயம் என்று சொல்லப்படுகிற உரிமையை நாங்கள் கொண்டிருக்கிறோம் என்பதன் அடிப்படையிலேயே இத் தீர்வுகளும், தீர்வுத் திட்டங்களும் போடப்பட்டுள்ளன. இவை இணக்கப்பட்டிற்கு வருகின்றன



நடைமுறைக்கு வரவில்லை.

இதனால்2015ஆம் ஆண்டு புதிய அரசியல். அமைப்பு உருவாக்கம் வேண்டும் என்பதற்காக எமது அடிப்படை அரசியல் அபிலாசைகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு அதற்கு இணங்கியவர்களுடன் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்களின் வாக்குகள் தான் காரணியாக இருந்தது.

இதனால் எதிரும் புதிருமாக இருந்த இரண்டு கட்சிகள் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஆட்சி அமைத்தது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே இரு கட்சிகளும் இணைந்தன.

இவர்கள் ஒன்றாக வந்த போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்து முழுமையான ஆதரவைக் கொடுத்தோம். எங்களது அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்புச் சட்டம் மாற்றமடைய வேண்டும். அதனாலேயே மக்கள் கருத்தறியும் குழு அமைக்கப்பட்டது. பல்வேறு இனங்கள்வாழ்கிற நாட்டிலே ஒரு இனத்திற்கு முன்னுரிமை கொடுப்பது அல்லது பல மதத்தவர்கள் வாழும் நாட்டிலே ஒரு மதத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுப் பது தவிர்க்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறியிருந் தார். அதன் அடிப்படையிலேயே புதிய அரசியல்அமைப்பிற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இடைக்கால அறிக்கை ஒன்று வருவதற்கு தயாராக இருந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பின் னடித்தது.

இதனால் 10, 11 மாதங்களின் பின்பே இடைக்கால அறிக்கை வந்தது. உள்ளூராட்சி தேர்தலில் அரசாங்கம் அடைந்த பின்னடைவால் மேலும் 6,7 மாதங்களின் பின்னர் தான் வழி நடத்தல் குழு கூடியது. அரசியல் அமைப்பு நகல் ஒன்றை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மிக முன்னேற்றமான விடயம் இந்த ஆட்சிக்குள்ளே நிறைவேறுமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்சியை ஏற்படுத்தவும், இந்த ஆட்சிக்கு பாராளுமன்றத்திலே மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நிரூபிப்பதற்கும் நாங்கள் உதவியாக இருந்ததே அடிப்படை காரணம். புதிய அரசியல் அமைப்பு நிறை வேற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. விளையாட்டு வீரர்கள் நம்பிக்கையுடன் விளையாடுவதும், பரீட்சையில் நம்பிக்கையோடு தோற்றுவது போலவுமே நாமும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் சம்பந்தமாக நம்பிக்கையோடு பயணிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# இராஜாங்க அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், அவரது மகன் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

150 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிர்மாணப் பணிகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு தொடர்பில் மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலே இவர்கள் மீது கடந்த வெள்ளிக்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமையவே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

# கலஹா வைத்தியசாலையை திறக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



(காலி)

கடந்த 28 ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ள கலஹா வைத்தியசாலையை மீண்டும் திறக்கக்கோரி கலஹா நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 28ஆம் திகதி குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்ததால், ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் வைத்தியசாலை சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன், வைத்தியரையும் தாக்க முற்பட்டதால், காலவரையறையின்றி வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால், நோயாளர்கள் தெல்தோட்டை, பேராதனை வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வைத்தியசாலையை திறக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இடமாற்றம் தொடர்பாக உடன் அறிவிக்கவும்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சு திணைக்களங்களில் கடமையாற்றி 2019 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,தங்களது நியமனக் கோரிக்கைகளின் அடிப்படையில் இடமாற்றம் தொடர்பாக வட மாகாண அரசசேவைப் பட்டதாரி உத்தியோகத்தர் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நிலை இருப்பின் தங்களது கோரிக்கைகளுக்கு உரிய சான்றுகளுடன் "தலைவர் செயலாளர், வடமாகாண அரச சேவைப் பட்டதாரிகள் சங்கம், நாகபூஷணி அம்மன் வீதி, கோண்டாவில்கிழக்கு கோண் டாவில்" என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண அரச சேவைப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் க.கஜிதன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-30)


## தேசிய அபிவிருத்தி லொத்தர்

கனகலிங்கம் திலகவதி யாழ்.முகவர் நிலையம்
16.08.2018 முதல் 15.09.2018 வரை கனகலிங்கம் திலகவதி முகவர் யாழ்ப்பாணம் ஊடாக வெல்லப்பட்ட பரிசுக்குவியல்

| | | |
|---|---|---|
| 16.08.2018 | நிரோகா அதிர்ஷ்டத்தில் | 10,00 000/= |
| 21.08.2018 | மகஜனா அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 23.08.2018 | சுப்பர்போல் அதிர்ஷ்டத்தில் | மோட்டார்சைக்கிள் |
| 23.08.2018 | அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் | தங்கம் |
| 23.08.2018 | அதகோடி அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 27.08.2018 | கொவித அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 28.08.2018 | மகஜன அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 01.09.2018 | அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் | 50,000/= |
| 08.09.2018 | அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் | தங்கம் |
| 11.09.2018 | மகஜன அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 12.09.2018 | நல்லூர் தனநிதானய அதிர்ஷ்டத்தில் | மோட்டார் சைக்கிள் |
| 12.09.2018 | நல்லூர் தனநிதானயஅதிர்ஷ்டத்தில் | ஒரு பவுண் தங்கம் |
| 13.09.2018 | கோடிபதி சனிதா அதிர்ஷ்டத்தில் | 100,000/= |
| 14.09.2018 | அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் | தங்கம் |
| 15.09.2018 | அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் | தங்கம் |

இவை அனைத்து பரிசுகளும் கனகலிங்கம் திலகவதி விற்பனை உதவியாளர்ஊடாக விற்பனை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் வெல்லப்பட்டுள்ளது.நீங்களும் இன்றே கனகலிங்கம் திலகவதி லொத்தரை யாழ்ப்பாணம் திருநெல்வேலி மற்றும் ஏனைய இடங்களில் கேட்டு வாங்கி அதிர்ஷ்டசாலியாகுங்கள். மேலும் விபரத்தை யாழ்.ஒலி FM ஊடாக அறிந்து கொள்ளுங்கள்.

(5696)

யாழ்.மாவட்ட முகவர்
யாழ்ப்பாணம் முகவர் கனகலிங்கம் திலகவதி



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பத்மராணி
கோபாலசந்திரநாயகன்

தோற்றம் 21.04.1956 மறைவு 28.09.2017

திதி- பூர்வ பட்ச அட்டமி

28.09.2017 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி திருமதி பத்மராணி கோபாலசந்திரநாயகனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் 17.09.2018 இன்று திங்கட்கிழமை அன்னாரினது வீட்டிலும் வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்திலும் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

"பத்மாபவனம்"
மருதநகர், கிளிநொச்சி.


குடும்பத்தினர்

(C-3850)

# பாரதம்

## கைதிகள் சொகுசு வாழ்க்கை விவகாரம்

# மூன்று மத்திய சிறைகளில் பொலிஸார் அதிரடி சோதனை




(சென்னை)

சென்னை புழல் சிறையில் கைதிகள் சொகுசாக வாழ்ந்த புகைப்படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், கோவை, சேலம் மற்றும் கடலூர் மத்திய சிறைகளில் பொலிஸார் நேற்று அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை புழல் மத்திய சிறையில் 750 இற்கும் மேற்பட்ட தண்டன்னை கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் சர்வதேச போதை பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்தவர்களும், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்களும் இருக்கின்றனர்.

இந்நிலையில் புழல் சிறையில்தண்டனை கைதிகள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் புகைப்படங்கள் வெளியாகி பர்பரப்பை ஏற்படுத்தியது. அதில் சில கைதிகள் சொகுசு மெத்தையுடன் கூடிய அறை, ஆடம்பர உடை, விதவிதமான உணவுகள், தொலைபேசிகளுடன் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தது தெரிய வந்தது.

இதனால் சிறைத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள அறைகளில் இருந்த் தொலைக் காட்சிகள், வானொலிகள் மற்றும் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்தனர். சிறை அறைக்குள் இவை எப்படி வந்தன? என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் சிறையில் இருந்தவாறே பங்களாதேஷ், மலேசியா உள்ளிட்ட பல் வேறு நாடுகளுக்கு தொலை பேசிகளில் சிலர் பேசியதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு உடந்தையாக இருந்த சிறைக் காவலர்கள் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இதனிடையே புழல் சிறையில் கைதிகள் சொகுசாக இருப்பதாக புகைப்படங்கள் வெளியானதை அடுத்து சேலம், கடலூர், கோவை மத்திய சிறையில் 180க்கும் மேற்பட்ட பொலிஸார் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

சேலத்தில் துணை ஆளுநர் சுந்தரமூர்த்தி தலை மையில் 40 பொலிஸாரும், கடலூரில் டி.எஸ்.பி. லாமேக் தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொலிஸாரும் காலை 6 மணி முதல் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் கோவையில் எஸ்.பி. செந்தில்குமார் தலைமையில் 10க்கும் மேற்பட்ட பொலிஸார் சோதனை நடத்தி வருகின்றனர். சிறை கைதிகளிடம் தடை செய்யப்பட்ட பொருட்கள் ஏதேனும் உள்ளதா எனவும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. (7)

# விஜய் மல்லையா விவகாரத்தில் சுதந்திரமான விசாரணை அவசியம்

## காங்கிரஸ் வலியுறுத்து



(டில்லி)

இந்திய வங்கிகளிடமிருந்து கடன் பெற்று மோசடியில் ஈடுபட்ட தொழிலதிபர் விஜய் மல்லையா நாட்டை விட்டு தப்பியோடிய விவகாரத்தில் நீதிமன்றத்தின் கீழ் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

விஜய்மல்லையாநாட்டை விட்டு தப்பியோடுவதற்கு முன்னர் நிதியமைச்சர் அருண் ஜெட்லியை சந்தித்தமை மற்றும் மல்லையாவுக்கு எதிராக குற்றப் புலனாய்வு பிரிவினர் வெளியிட்ட தேடுதல் அறிவிப்பு திருத்தப்பட்ட விவகாரம் ஆகியவை தொடர்பாக காங்கிரஸ் கட்சி கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றது.

அதாவது மல்லையாவை பார்த்தால் பிடித்து கொடுக்க வேண்டுமென விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் மாற்றங்களை செய்து, அவர் வெளிநாடுகளுக்கு சென்றுவரும் தகவல்களை தெரிவிக்க வேண்டுமென திருத்தப்பட்டிருப்பதாகவும் இதனை திருத்தியவர் சி.பி.ஐ. இணை இயக்கு நர் ஏ.கே.சர்மா எனவும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த அறிவிப்பை தமது டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ராகுல் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ஜெய்வீர் செர்ஜில் கூறுகையில், விஜய் மல்லையா தப்பியோடிய விவகாரத்தில் சி.பி.ஐ. இணை இயக்குநர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் அரசு அல்லது விசாரணை நிறுவனங்களின் விசாரணையை நம்ப முடியாது.

ஆகையால் நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் சுதந்திரமாக விசாரிக்க வேண்டும் என அவரும் குறிப்பிட்டுள்ளார். (7)

# வடகொரியா ச...
# ரஷ்யா தடு...

## அமெரிக்க அமை...


(பியாங்யாங்)

வடகொரியா சர்வதேச நாடுகளுடன் இணைவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வீழ்த்துவதற்கான செயற்பாடுகளை ரஷ்யா தீவிரமாக மேற்கொண்டு வருவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மாநில திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகங்களுடனான சந்திப்பில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் போம்பியோ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ்வாறு ரஷ்யாவின் மீது குற்றஞ் சாட்டியுள்ளார்.

அத்துடன், வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுத பரிசோ

# அமெரிக்காவைத் த...
# புளோரன்ஸ் பு...
# 10 பேர் உயிரி...



(நியூயோர்க்)

புளோரன்ஸ் புயலில் சிக்கி உயிரிழந்தவர்களின் தொகை 10 ஆக உயர்வடைந்துள்ளது. அதன்படி வடக்கு கரோலினாவின் டப்பிளின் கவுண்டியில் மூன்று பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

மேலும் வடக்கு கரோலினாவில் ஐந்து பேர் உயிரிழந்த னர். அத்துடன் தெற்கு கரோலினாவில் புயலில் சிக்குண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

புயல் தாக்கிய வடக்கு கரோலினாவில் பல்லாயிரம் பேர் அவசர உதவி மையங்களில் தங்கியுள்ளனர்.


வெ...
இருந்து
எச்சரிக்...
பேர் மி...
தவிக்கி...
படையி...
தொடர்...
னெடுத்...



எகிப்திலுள்ள மிகத் தொன்மைவாய்ந்த கட்டடத்தினுள் இதுவரை ெ...
பழைமைவாய்ந்த கல்லறைப் பிரமிட்டு உட்பட அனைத்தும் பொதுமக்க...
மெஹு என்ற எகிப்தில் காணப்படும் அனைத்து பிரமிட்டுக் கோபுரங்க...
திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடு

## ா சமூகமயமாவதை
## டுத்து வருகிறது
### மைச்சர் குற்றச்சாட்டு



தனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடுப்பது மட்டுமே ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்பார்ப்பு எனவும் மைக் போம்பியோ குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யர்களால் வடகொரியாவின் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் பற்றிய கலந்துரையாடலை மேற்கொண்ட ஐக்கிய நாடுகளுக்குள் ஏற்பட்ட பிளவு தொடர்பாக நேற்று முன் தினம் ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவர் நிக்கி ஹாலே தெரிவித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து மைக் போம்பியோ இவ்வாறு ரஷ்யாவைக் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## த் தாக்கிய
## புயலில்
## ிரிழப்பு



வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து 17 இலட்சம் பேர் வெளியேற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. 8 இலட்சம் பேர் மின்சாரம் இன்றி இருளில் தவிக்கின்றனர். அத்துடன் மீட்புப் படையினரும், கடற்படையினரும் தொடர்ந்தும் மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

## பேருந்து கவிழ்ந்து விபத்து உயிரிழப்பு 20 ஆக உயர்வு



(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பயணிகள் பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பலியானவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கிஷ்ட்வார் மாவட்டத்தில் நேற்றுக்காலை பயணிகளை ஏற்றி வந்த சிறிய ரக பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து 300 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்தது.

இது குறித்து பொலிஸாருக்கு உடனே தகவல் அளிக்கப்பட்டு மீட்பு பணிகள் தொடங்கின. இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர் என முதல் கட்டமாக தகவல் வெளியானது.

இந்நிலையில் பேருந்து கவிழ்ந்து விழுந்த விபத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதென மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதே பகுதியில் கடந்த ஒரே மாதத்திற்குள் நடக்கும் மூன்றாவது பெரிய விபத்து என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## அ.தி.மு.கவை அழிக்க எவரும் பிறக்கவில்லை – பழனிச்சாமி

(சென்னை

அ.தி.முகவை அழிப்பதற்கு இன்னும் எவரும் பிறக்கவில்லையென தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் 110ஆவது ஜனன தின நிகழ்வு, காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்துக்கு பின்னரும் கட்சி வலிமையாக உள்ளதெனவும் எதிர்வரும் தேர்தலில் அ.தி.மு.க சிறந்த வெற்றியை அடையுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)



இதுவரை பொதுமக்கள் அனுமதிக்கப்படாதிருந்த நிலையில், தற்போது 4300 வருடங்கள் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது. கடந்த 1940ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கோபுரங்களை விடவும் பழைமைவாய்ந்த கல்லறை பொதுமக்களின் பார்வைக்காக தற்போது

## பிலிப்பைன்ஸை தாக்கிய மொங்குட் பலி எண்ணிக்கை 30 ஆக உயர்வு

(மணிலா)

பிலிப்பைன்ஸை மையங்கொண்ட மொங்குட் சூறாவளியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது.

மேலும் பலர் காணாமல் போயுள்ள நிலையில், உயிரிழப்புகள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தாக்கிய இந்த சூறாவளியானது, இந்த ஆண்டில் அந்நாடு எதிர்கொண்ட மிக மோசமான இயற்கை அனர்த்தமென தெரிவிக்கப்படுகிறது.



சூறாவளியைத் தொடர்ந்து மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்துள்ளதோடு, கூரைகள் வீசியெறியப்பட்டுள்ளன. அத்தோடு 42 மண் சரிவுகளும் பதிவாகியுள்ளதோடு, வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது.



இதனால் பாரிய சொத்தழிவு ஏற்பட்டுள்ளதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பிலிப்பைன்ஸின் ககயன் மாகாணத்திலுள்ள விவசாய பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும்நிலங்கள் பாரியளவில் சேதமடைந்துள்ளன. (7)

## காஸாவில் இஸ்ரேல் துப்பாக்கிச்சூடு 11 வயதுச்சிறுவன் உட்பட மூவர் பலி

(காஸா)

காஸாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் 11 வயது சிறுவன் உட்பட மூன்று பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



வெள்ளிக்கிழமை காஸா எல்லையில் 15000 பாலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் டயர்களை எரித்ததாகவும் அதிலிருந்து புகைகள் வெளியாவதை பயன்படுத்தி படையினர் மீது கற்களையும் கைக்குண்டுகளையும் வீசியதாகவும் இதில் இஸ்ரேலிய படையினர் சிலர் காயமடைந்தனர் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை 11 வயது சாடி அப்டெல் அல் உட்பட மூவர் இஸ்ரேலிய படையினரின் துப்பாக்கி பிரயோகத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீன வைத்திய தரப்புகள் தெரிவித்துள்ளன. (7)

## வெனிசுவெலா அகதிகளுடன் லூயிஸ் அல்மாக்ரோ சந்திப்பு

(கராகஸ்)

வெனிசுவெலாவிற்கும் கொலம்பியாவிற்கும் எல்லையாகவுள்ள கொலம்பிய நகர் குகுடாவில் அமெரிக்காவின் மாநில அமையத்தின் செயலாளர் நாயகம் லூயிஸ் அல்மாக்ரோ வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்களை சந்தித்துள்ளார்.

வெனிசுவெலாவிலிருந்து கொலம்பிய நாட்டின் எல்லைப் பகுதியான குகுடா நகரத்திற்கு வந்து குவியும் விவகாரம் தொடர்பில் அண்மையில் கொலம்பிய ஜனாதிபதி ஐவன் துக்கை அமெரிக்காவின் மாநில அமையத்தின் செயலாளர் நாயகம் லூயிஸ் அல்மாக்ரோ மற்றும் அமையத்தின் முக்கிய பிரமுகர்கள் சந்தித்து உரையாடியுள்ளனர்.



குறித்த நிகழ்வினைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை புதிய வாழ்க்கையை நாடி குறித்த நகரத்திற்குள் நுழைந்துள்ள வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்களைச் சந்தித்து லூயிஸ் அல்மாக்ரோ கலந்துரையாடியுள்ளார்.

இது குறித்து லூயிஸ் ஊடகங்களுக்கு கூறியதாவது, மீள முடியாத பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற் கொள்ள வேண்டுமென அல் மாக்ரோ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த வெனிசுவெலா மக்கள், கொலம்பியாவின் எல்லையிலுள்ள சைமன் பொலிவர் சர்வதேச பாலத்தின் ஊடாக குகுடா நகரத்திற்குள் நுழைந்து வருகின்றனர்.

இவ்வாறு வருகைதரும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்வதால் கொலம்பிய நாடு பாரிய சவாலை எதிர்நோக்குகின்றது.

வெனிசுவெலாவில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பங்களினால் அந்நாட்டு மக்கள் இலத்தீன் அமெரிக்க நாடுகளிடம் புகலிடம் கோரிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஜனாதிபதியை கொலை செய்யும் திட்டம் தொடர்பாக விசாரணை

## பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா கோரிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்கான சதித் திட்டம் தொடர்பில் வெளியான தகவல்களின் அடிப்படையில் உடனடியாக விசாரணை செய்யப்படவேண்டும் என பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் மீது கிழக்கு மாகாணத்தில் வைத்து தாக்குதல் நடத்தும் திட்டம் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்து சட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

இதில் பொலிஸ் உயரதிகாரி எனும் விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படக்கூடாது. பாரபட்சமின்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதற்கு முன்னரும் கொலைக் குற்றத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, புதையல்தோண்டிய சம்பவத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தில் சுவிஸ்குமாருக்கு பாதுகாப்பளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரு பிரதேசங்களில் தீப்பரவல்

(கம்பஹா)

கம்பஹா மற்றும் வத்தளை ஆகிய இரு பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.



கம்பஹா-ரத்துபஸ்வல பிரதேசத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள நிலப்பரப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் தீப்பரவல் ஏற்பட்டது.

அந்த தீ தற்போது இறப்பர் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியைநோக்கி பரவி வருவதாக தீயணைப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வத்தளை -வெடிகந்த பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைக்கு அருகிலும் மதியம் நண்பகல் தீப்பரவல் ஏற்பட்டது.

தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் முயற்சிகளை மேற்கொண்டனர். (இ-7)

# வியன்னாவுக்கான தூதுவரை திருப்பி அழைத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

வியன்னாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகரவையும், அங்குள்ள ஐந்து இலங்கைத் தூதரக அதிகாரிகளையும் உடனடியாக நாடு திரும்புமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

வியன்னாவில் இருந்த இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகரவுடன் கடந்த வாரம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச நான்கு மணித்தியாலங்கள் முயற்சித்தும், பலனளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

கடைசியாக, அங்குள்ள காவல்காரர் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்துள்ளார். தூதரகத்தில் யாரும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

அதற்குப் பின்னர், குறிப்பிட்ட காவல்காரர், பிரியானி விஜேசேகரவுக்கு ஜனாதிபதியின் தொலைபேசி அழைப்பு குறித்து தெரியப்படுத்திய போதும், அவர், தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை.

இதையடுத்தே, கடந்த வெள்ளிக்கிழமை பிரியானி விஜேசேகர மற்றும், தூதரக அதிகாரிகளான தயானி மென்டிஸ், ஜிகான் திசநாயக்க மற்றும் தூதுவரின் தனிப்பட்ட உதவியாளர் உள்ளிட்டவர்கள் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் புதிய தூதுவர் நியமிக்கப்படுவார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலரான பிரியானி விஜேசேகர ஓய்வுபெற்ற பின்னர், வியன்னாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர்கள் நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர் என்பதை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், எதற்காக திடீரென அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. (இ-7)

# இந்த அரசு பிரபாகரனுக்கு சமனானது

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச தேவைக்கு ஏற்ப செயற்பட்டு வரும் இந்த நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புதிதாக சமர்ப்பிப்பதற்கு இன்னும் என்ன யோசனைதான் எஞ்சியிருக்கின்றது எனவும், ஜனாதிபதி முன்வைக்கவுள்ளதாக கூறப்படும் புதிய பிரேரணை பிரச்சினைக்குரியது எனவும் கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.



இலங்கை தொடர்பில் முக்கிய பிரேரணையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் பிரபாகரனுக்கு சமனானது. கூட்டுஎதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்களுக்கு நஞ்சூட்டிய அரசாங்கம் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படும் ஒரு அரசாங்கமே இதுவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வெளி ஆள் முதல் தகவல் தருவதா?

உடன் பணிபுரியும் நண்பர்கள் ஒன்று சேர்ந்து சுற்றுலா செல்வதென்று அலுவலகத்தில் முடிவெடுத்தார்கள். இந்த முடிவை அவரவர்கள் தத்தம் மனைவிகளிடம் மூடு பார்த்துச் சொல்லியிருக்க வேண்டுமா வேண்டாமா?

சில பேர் சொல்லவில்லை. நண்பர் ஒருவர் அப்பாவித்தனமாக அனைவர் வீட்டிற்கும் பேசி, "சுற்றுலாவுக்கு உங்க கணவருக்கு டிக்கெட் எடுத்தாச்சுன்னு சொல்லுங்க'' என்று சொல்லப் போக, பல வீடுகளில் "டமால்! டுமில்! நச்! நங்! ஒரே உள்நாட்டுக் குழப்பம்.

''எங்கிட்ட ஏங்க நீங்க முதல்லயே சொல்லல. அவர் சொல்றாரு எனக்கு! அதெல்லாம் நீங்க போகக் கூடாது" என்பது போன்ற சூடான வாக்குவாதங்கள். இது தேவையா?

வீடு வாங்கியதும், திருமணம் பேசியதும், குழந்தை பிறந்ததும், லோட்டரியில் பரிசு விழுந்ததும், டிரான்ஸ்பர் ஆனதும், புரமோஷன் வந்ததும் நாம் சொல்லித்தான் நம்மவர்களுக்குத் தெரிய வேண்டும். யாரோ சொல்லித் தெரிய வந்தால், நாம் அவரோடு எவ்வளவு நெருக்கம்! அப்படியும் மூணாவது மனுஷன் சொல்லித் தெரிஞ்சுக்கும்படி ஆயிடுச்சே என்று வருந்துகிறார்கள். சில பேர் உரிமையோடு சண்டைக்கு வருகிறார்கள், ஏன் எனக்குச் சொல்லலை என்று. சில பேர் விலகியே போய்விடுகிறார்கள். இது தேவையா? தம்பி தன் மகனுக்குத் திருமணம் பேசினார். உடனே அண்ணனுக்கு சொல்ல வேண்டுமா? வேண்டாமா? சொன்னதில் தாமதம். ''எனக்கு ஏற்கனவே தெரியும். என்னென்னவோ நடக்குது. நடக்கட்டும்'' என்றார் அண்ணன் . தம்பி மூட் அவுட் !

பெரிய ஓடர். பங்குதாரர் தன் சக பங்குதாரருக்கு உடனே சொல்லவில்லை. கடையில் வேலை செய்பவன் மூலம் தெரிய வந்ததும் பங்கில் விரிசல் ஆரம்பம்.

வீடு வாங்கியதையும், நிலம் வாங்கியதையும், லோட்டரியில் பரிசு விழுந்ததையும், வெளிநாடு செல்வதையும், பதவி உயர்வையும் எப்படிப் போய்ச் சொல்வது? அது தம்பட்டம் ஆகாதா என்று தயங்கித் தயங்கியே பலருக்கு கெட்ட பெயர்.

''என் நலனில் அக்கறையுள்ளதங்களுக்கு இதைத் தெரியப்படுத்துவது என் கடமை'' என்ற ஒரு வரியைச் சேர்த்தால் போதும்!

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

45

அக்கால பிராமணிய விழாக்கள் பற்றிய தகவல்களைக் கல்வெட்டுகள் சிலவற்றிலும் காணமுடிகிறது. எனவே, சைவ சமயம் அக்கால ஆட்சியாளர்கள் மத்தியிலும், பொதுமக்கள் வாழ்விலும் மிக முக்கியமான இடத்தினைப் பிடித்திருக்கின்றது என்பதனை மேற்கூறிய நிகழ்வுகள் மூலம் அறியமுடிகிறது.

மேற்கூறிய ஒரு பின்னணியிலிருந்து நோக்கும்போது, இலங்கையில் வரலாற்றுக் காலம் தொடக்கம் சைவசமயம் இலங்கையின் ஆட்சியாளர்கள் மத்தியிலும், அவர்களது அரசுகள் மத்தியிலும், பொதுமக்கள் வாழ்விலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட, செல்வாக்குப் பெற்ற ஒரு சமயமாக இருந்திருக்கின்றது. எனவே, பௌத்தமதம் மேற்கூறப்பட்ட காலப் பகுதிகளில் கொண்டிருந்த செல்வாக்கினை விட, சைவசமயம் மிகவும் உன்னத நிலையில் இருந்திருக்கின்றது என்பது முக்கியமான வரலாற்று உண்மையாகும்.

இலங்கையில் சோழராட்சியின் பொது சைவக் கோவில்கள் தவிர, தமிழர்களுடைய பௌத்த வழிபாட்டுத்தலங்களும் தோற்றம் பெற்றன. இதனால் பௌத்தம் தமிழர்களின் மதமாகவும் இருந்திருக்கின்றது. ஆனால், கி.பி.300–கி.பி.900 காலப் பகுதியில், பௌத்தம் தமிழர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை போல், இலங்கையில் சோழராட்சிக் காலத்தில் பௌத்தம் சைவசமயம் போல் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அத்தோடு, பல பௌத்த தலங்கள் இக்காலப் பகுதியில் முற்றாக அழிந்து போயின.

ஆனால் சில பௌத்த கோவில்கள் சோழராட்சியின்போது நன்றாகப் பேணப்பட்டும் இருந்திருக்கின்றன. உதாரணமாக, திருகோணமலைப் பிரதேசத்தில் பெரிய குளம் என்னுமிடத்தில் அமைந்துள்ள ராஜராஜப் பெரும் பள்ளியைக் குறிப்பிடலாம். பலகாலமாக அவ்விடத்திலிருந்த இப் பௌத்த கோவில், சோழராட்சியின் போது திருத்தியமைக்கப்பட்டு தமிழ் மக்கள் மத்தியில் பெருஞ் செல்வாக்கினைப் பெற்ற ஒரு தமிழ்ப் பௌத்தபள்ளியாக இருந்திருக்கின்றது என்பதனை அறிய முடிகிறது. அதன் கட்டடப் பாணியும், திராவிடக் கலைப் பாணியைக் கொண்டு காணப்படுகின்றது.

இத் தலத்திற்கு தானங்கள் வழங்கி யோரால் சுமார் பதினைந்து தமிழ்க் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, கிழக்கிலிருந்த இன்னுமொரு பௌத்த கோவில், விக்கிரம சலாமேகப் பெரும்பள்ளி ஆகும்.

கிழக்கிலும் அநுராதபுரம், பொலநறுவை போன்ற பிரதேசங்களிலும் தென்மேற்கிலும் பௌத்த மதம் தமிழ்மக்கள் மத்தியில் முக்கியத் துவம் பெற்ற அளவுக்கு இலங்கை யின் வடபுலமான வன்னிப் பெருநிலம், யாழ்ப்பாணத் தீபகற்பம், மன்னார் பிரதேசம்



ராஜராஜப்பெரும்பள்ளி

> “சோழராட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமய சகிப்புத் தன்மை காரணமாக அங்கு பல தமிழ்ப் பௌத் தர்கள் தோன்றினர். புகழ்வாய்ந்த தமிழ் பௌத்தத் துறவிகள் தமிழ் நாட்டிலிருந்து, இலங்கைக்கு வந்து சோழராட்சிக் காலத்தின்போதும், அதனைத் தொடர்ந்தும் தமது தொண்டினைப் பௌத்த மதத்திற்கு ஆற்றியிருக்கின்றார்கள். அவ்வாறாக வந்தவர்களில் தீபங்கரர், காசியப்பர், புத்தமித்திரர், ஆனந்தர், அநுரத்தர் என்போர் முக்கிய மான தமிழ் பௌத்த துறவிகளாக விளங்கியிருக்கின்றார்கள்”

## சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி. 900-கி.பி. 1200)

போன்ற இடங்களில் பௌத்தமதம் சோழராட்சிக் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற தாகத் தெரியவில்லை. இப்பிரதேச ங்களின் மக்கள் மத்தியில் சைவ சமயம் அதிக செல்வாக்கினைப் பெற்றிருந்தமையால் அவ்வாறான ஒருநிலை ஏற்பட்டது என்று கூறமுடி யும்.

அத்தோடு, சோழராட்சிக் காலத்தில் இப்பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கோவில்கள் பற்றிய விபரங்களும் கிடைக்காது போய்விட்டன. இதற்கு முக்கிய காரணம், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, போர்த்துக்கீசர் 600க்கும் மேற்பட்ட கோவில்களை இடித்து அழித்தமையாகும்.

பௌத்தமதத்தைக் பொறுத்து, கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கும் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தென்னிந்தியாவில் சைவ, வைணவ சமயங்களுக்கும் பௌத்த மதத்திற்கும் இடையில் ஏற்பட்ட போட்டிகள், பூசல்களின் போது சைவ, வைணவ சமயங்கள் மக்கள் ஆதரவைப் பெற்றன. இதன்பின்னர் வருகின்ற சோழராட்சிக் காலத்தில் சைவ, வைணவ சமயங்களின் உச்சகட்ட வளர்ச்சி ஏற்படுகிறது. இதன் விளைவாக அங்கு சமய அமைதிக்காலம் நிலவியதைக் காணமுடிகிறது.

இந் நிலையில் பௌத்த மதம் தென்னிந்தியாவில் எதிர்ப்புக் களின்றி சிலகாலம் இயங்க முடிந்தது. எனவே, சோழராட்சிக் காலத்தில் ஏற்பட்ட சமய சகிப்புத் தன்மை காரணமாக அங்கு பல தமிழ்ப் பௌத்தர்கள் தோன்றினர். புகழ்வாய்ந்த தமிழ் பௌத்தத் துறவிகள் தமிழ் நாட்டிலிருந்து, இலங்கைக்கு வந்து சோழராட்சிக் காலத்தின்போதும், அதனைத் தொடர்ந்தும் தமது தொண்டினைப் பௌத்த மதத்திற்கு ஆற்றியிருக்கின்றார்கள். அவ்வாறாக வந்தவர்களில் தீபங்கரர், காசியப்பர், புத்தமித்திரர், ஆனந்தர், அநுரத்தர் என்போர் முக்கியமான தமிழ் பௌத்த துறவிகளாக விளங்கியிருக்கின்றார்கள்.

எனவே தமிழ் நாட்டுப் பௌத்த சங்கத்திற்கும், இலங்கையிலுள்ள பௌத்த சங்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் நல்லுறவு இருந்திருக்கின்றன என்று பாளி நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. மேலும், கி.பி.பதினொராம், பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் மிகச் சிறந்த பௌத்தப் பள்ளிகள் தமிழ்ச் சிற்பிகளாலும் கட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் பொலநறுவையில் அமைக்கப்பட்ட ஒரு தூபிக்கு ‘தமிழ்தூபம்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இதேபோன்று, சோழராட்சிக் காலத்தில் பிரபலமாக விளங்கிய தமிழ்ப் பௌத்த தலமாகிய ராஜராஜப் பெரும்பள்ளி திருகோணமலை மாவட்டத்தில் பெரிய குளம் என்னுமிடத்தில் காணப்படுகின்றது.

இப்பள்ளி அழிந்த நிலையிலிருப்பதைத் தொல்லியற் திணைக்களத்தினர் 1929 இல் கண்டுபிடித்தனர். 1953 இல் இங்கு அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டபோது, இக் கட்டடம் கவர்ச்சிகரமானதாக, சோழர் காலத்து சைவக் கோவில்களின் கட்டடப் பாணியில் அமைந்திருந்ததனை ஆய்வாளர்கள் கண்டு கொண்டனர்.

எனவே மேற்கூறப்பட்ட ஒரு பின்னணியிலிருந்து பார்க்கும் பொழுது, சோழராட்சிக் காலத்தில் சைவம் அதன் உச்சக்கட்ட வளர்ச்சியினை அடைந்திருப்பதைக் காணமுடிகிறது. அத்தோடு, பௌத்த மதமும் தமிழர் மத்தியில் முக்கியத்துவம் பெற்ற ஒரு மதமாக இருந்திருக்கின்றது என்பதனையும் அறியமுடிகின்றது.

இருப்பினும், சோராட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இலங்கை யின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் மத்தியில் சைவசமயம் அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த சமயமாக மாறுகின்றது. அநுராதபுரம், பொலநறுவை இராச்சியங்களின் வீழ்ச்சியும், தொடர்ந்து அப் பிரதேசங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் காடு சூழ்ந்த பிரதேசமாக மாறிய நிலைமையும் சைவம், பௌத்தம் என்பன பொறுத்தும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

அதாவது, மேற்படி இராச்சியங்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், சிங்கள வம்சத்தவரின் ஆட்சி தெற்கு நோக்கி நகர்ந்தபோது, பௌத்தமதமும் அவர்களோடு இணைந்து கொண்டது. இக் காலகட்டத்தில் வடக்கில் எழுச்சிபெற்ற யாழ்ப்பாண இராச்சியம் சைவத் தினைத் தன்பால் ஈர்த்துக் கொண்டது.

ஆகவே, பௌத்தம் சிங்கள வம்சத்தவருடன் தெற்கில் சென்றடைய, சைவம், தமிழ் வம்சத்தவருடன் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் நிலைத்துக் கொண்டது. இந்நிலையில் பௌத்தமதம், தமிழ் மக்கள் மத்தியில் நிரந்தரமாகச் செல்வாக்கிழந்த மதமாக வரலாற்றில் இடம் பெற்றமைக்கு சோழராட்சிக் காலம் முக்கியமான காரணியாக இருந்திருக்கின்றது.

அதேவேளையில், இலங்கையில் மேற்கூறப்பட்ட பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் மத்தியில் சைவசமயம் ஒரு நிலையான இடத்தையும், தனித்துவமான அடையாளத்தை பெற்றுத் தொடர்ச்சியாக இன்றுவரை வளர்ந்து செல்வதற்கு சோழராட்சிக் காலம் வழிவகுத்துக் கொடுத்திருக்கின்றது என்று கூறுவதில் தவறு இருக்கமுடியாது. இன்று, தமிழர்களின் தேசிய அடையாளங்களில் சைவசமயமும், தமிழ் மொழியும் தமிழ்க் கலாசாரமும் ஒரு பெரும் சக்தியாக வளர்ந்தமைக்கு இலங்கையில் சோழராட்சிக் காலம் பெரும் பங்காற்றியிருக்கிறது.

(தொடரும்)

# அரசிலுள்ள தலைவர்கள் போன்று எனக்கு இரண்டு நாக்கு கிடையாது

## மகிந்த ராஜபக்ஷ காட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திலுள்ள ஏனைய தலைவர்கள் போன்று நான் ஒவ்வொரு இடத்திலும் கருத்துக்களை மாற்றி மாற்றி பேசுவதில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கெப்பற்றிகொல்லாவப் பகுதியில் கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேருந்து குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டில் இருக்கும் போது இந்திய எதிர்ப்புக் கொள்கையும் இந்தியாவுக்கு சென்ற போது இந்திய ஆதரவு கொள்கையையும் வெளிப்படுத்துவதாக அரசாங்கத் தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் மகிந்தவிடம் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் வைத்து கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது குறித்து கருத்துத் தெரிவித்திருந்தீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியதற்கு, நான் தெரிவித்தது ஒன்று. ஊடகங்கள் அதனை திரிபுபடுத்திக் கூறியுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (இ-7)

# ஐக்கிய மக்கள் முன்னணியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய் ஐக்கிய மக்கள் முன்னணியை பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.

இதன்போது கட்சியின் பெயரையும் மாற்றம் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவிஸ்ஸாவெல்ல, வகவத்த பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 6 (சுக்கிரன்)

## (சுகபோகவான்கள்)

**6 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

பெயரை அதிர்ஷ்டமாக்கிக் கொண்ட 6 ஆம் எண்காரர்கள் தாங்கள் இடும் கையெழுத்தையும் வசியமாக்கிக் கொள்ள வேண்டும். சுக்கிர ஆதிக்க எழுத்துக்களை மற்ற எழுத்துக்களை விடவும் பெரிதாக குறியிட வேண்டும். சூரிய ஆதிக்க உயர்ந்த கோபுர எழுத்துக்களை மேல் நோக்கி கோபுரம் போல உயர்வாகக் குறியிட வேண்டும். வலப்புறச் சுழி அமைப்பு சுறுசுறுப்பையும் ஓய்வில்லா உழைப்பின் மூலம் சாதனைகளையும் நிகழ்த்தச் செய்யும். பெரும் புகழ், கௌரவம், செல்வாக்கு, அதிகார மிக்க பதவிகள், சுகமான வாழ்க்கை என்று எண்ணிய காரியம் எல்லாம் ஈடேற்றும் வல்லமையைப் பெற்றுத் தரும். 4 முதல் 6 செ.மீ. வரையுள்ள கையெழுத்து 23 பாகை சாய்வுக் கோணத்துடன் குறியிட வேண் டும். புள்ளிகள் சோக சம்பவத்தை அரங்கேற்றும். கோடுகள் தடைகளை ஏற்படுத்தும். காரியத்தடைகள் மூலம் மனவேதனைக்குள் ளாக்கும். கையெழுத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொண்டால் எந்தக் கால நேரத்தைப் பற்றியும் தீய சக்திகளைக் கண்டும் அஞ்ச வேண்டியதில்லை.


**சுக்கிர ஆதிக்க திகதிகளில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

**6 ஆம் திகதி பிறந்தவர் களின் குணாதிசயங்கள்**

மிகவும் கண்ணியமானவர்கள். ஊக்கமுடையவர்கள். அடக்கமும் ஆழ்ந்த கருத்துக்களும் உடைய நபர்கள். கலைகளில் தேர்ச்சி அடைவார்கள். பொருள் சேர்க்கும் ஆர்வமுடையவர்கள். பெண் தன்மை உடையவர்கள். கடமை தவறாதவர்கள். துணிச்சல் மிக்கவர்கள். கற்பனை சக்தி அதிகமிருக்கும். அழுத்தம் திருத்தமான கருத்துக்களை அதிகம் உடையவர்கள். பல கலைகளைக் கற்றவர்கள். நடை, உடை பாவனைகளில் பெண் தன்மை அதிகமிருக்கும். சொத்து சுகம் சேர்ப்பதில் தீவிர நாட்டமுடையவர்கள். கலை, காவியம், நாட்டியம், நடனம், சங்கீதம் போன்றவற்றில் ஞானமுடையவர்கள். வெற்றியின் இரகசியங்களை அறிந்து வைத்திருப்பார்கள். புகழ் பெறுவார்கள். குளிர்ந்த பார்வையால் மற்றவர்களை மயக்கி விடுவார்கள். மற்றவர்களிடம் மிகுந்த அன்பு செலுத்துவார்கள். போக விடயங்கள் இவரைப் பெரிதும் கவர்ந்திழுக்கும். வசீகரமான தோற்றமுடையவர்கள். கைராசிக்காரார்கள். தொழிலில் தீவிரமாக உழைத்து வெற்றி பெறுவார்கள். தன் தகுதிக்கு மீறிய வண்ணம் காதலிப்பார்கள். பெண்களால் பொன்னும் பொருளும் அடைவார்கள். இருபாலாரும் நல்ல அந்தஸ்தான இடத்தில் மணம் புரிவார்கள். தலைமைப் பொறுப்புகள் வந்தடையும். வாழ்க்கையில் அனைத்துத் தேவைகளையும் குறைவில்லாமல் அனுபவிப்பார்கள். உல்லாசமாகவே இருக்க விரும்புவார்கள். அடிமைகளாக ஒடுங்கி வாழ மனம் இடம் தராது. முகத்தில் புன்னகை ததும்பும். இவர்கள் பேச்சில் இருக்கும் அளவு தாராளம் கையில் இருக்காது. பருவ வயதில் அளவுக்கு மீறிய உடல் வனப்புடன் இருப்பார்கள். சுகமான எல்லா பாக்கியத்தையும் குறைவில்லாமல் அனுபவித்து வாழ்வார்கள்.

**15ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

மிகுந்த வசீகரம் உடையவர்கள். ஜனவசியம் மிக்கவர்கள். கலை உள்ளம் மிக்கவர்கள். எல்லோரையும் மிக எளிதில் கவர்ந்திழுத்து விடுவார்கள். ஏதாவது ஒரு விதத்தில் ஆதாயமிருக்கும். பிரமிக்கத்தக்க பேச்சு இருக்கும். பிரபல மனிதர்களைப் போல பேசுவார்கள். அழகான தோற்றமிருக்கும் வாக்குப் பலமுடையவர்கள். பேச்சிலே இணையற்றவர்கள். சுகம், சந்தோசம், போகங்கள் வலிய வந்தடையும். தொழில் துறையில் புரட்சிகள் செய்து பணவசதிக்குக் குறைவில்லாமல் வாழ்வார்கள். வாதத் திறமை மிக்கவர்கள். நகைச் சுவையுடன் பேசி அனைவரையும் பழக்கப்படுத்திக் கொள்வார்கள். மதி நுட்பம் மிக்க இவர்கள் எதையும் கூர்மையான அறிவுடன் சிந்திப்பார்கள். துன்பத்தை நொடிப் பொழுதில் தூக்கி எறிந்து விடுவார்கள். எவரையும் பார்த்த உடனேயே புரிந்து கொள்வார்கள். பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். எப் போதும் மன அமைதியும் சந்தோசமும் நிரம்பிக் காணப்படு வார்கள். காந்த சக்தி கொண்ட பார்வை உடைவர்கள். சிறந்த நடிகரைப் போல காட்சியளிப்பார்கள். எல்லோரிடமும் நன்கு பழகுவார்கள். தன்னுடைய தொழில் மற்றவர் குறுக்கி




டுவதை விரும்ப மாட்டார்கள்.(வீணான காதல் விவகாரங்கள் கெட்ட பெயரையும் அவமானத்தையும் ஏற்படுத்தும்) பேச்சு பிரமாதமாய் இருக்கும். பேச்சும் எழுத்தும் முன்னேறச் செய்யும் மற்றவர்களின் துயர் துடைக்க முற்படுவார்கள். அதிகபடியான நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். சமூகத்தில் நல்ல அந்தஸ்தும் புகழும் உண்டாகும். வாகனப்பிரியராக இருப்பார்கள். சுற்றுப்பயணத்தில் நண்பர்கள் புடைசூழ இருப்பதை மிகவும் விரும்புவார்கள். நல்ல மன இயல்புடன் வாழ்வார்கள்.

**24 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

எதிலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் நடந்து கொள்வார்கள். அதிகமான தன்னம்பிக்கை உடைய இவர்கள் எந்தக் காரியத்தையும் எளிதில் சாதித்து விடுவார்கள். சமயோசித புத்தி இருக்கும். கலைத்துறையில் பெரும் சாதனை செய்வார்கள். பிரபலமான முன்னேற்றம் உண்டாகும். மனம் மகிழ்ந்து மற்றவர்களுக்கு உதவி செய்வார்கள். பணம், பதவி, புகழ் அனைத்தும் தேடி வரும். தன்னடக்கம், உழைப்பு, பெரும் பணம் சேர்க்கும் பாக்கியம் உண்டாகும். நல்ல கௌரவமும் அந்தஸ்தும் உடைய பெரிய இடத்தில் திருமணம் செய்து சுகமான வாழ்க்கை வாழ்வார்கள். துணிச்சல் மிக்க இவர்கள். சாமர்த்தியசாலிகள். மிகச்சிறந்த பதவிகளும் பொறுப்புகளும் தானாகத் தேடிவரும். அயராத உழைப்பால் மிகப் பெரிய அதிர்ஷ்டத்தை அடைவார்கள். பெரியோர்களின் பாராட்டைப் பெறுவார்கள். சமுதாயப் பணிகளை செவ்வனே செய்வார்கள். உழைப்பிலும் செயலிலும் தீவிரவாதத் தன்மை இருக்கும். வயது ஏறஏற வாழ்க்கைத்தரமும் கூடும். குடும்ப வாழ்க்கை குதூகலத்துடன் இருக்கும். சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாகக் கணக்கிட்டு வெற்றி பெறுவார்கள். கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். உதவி செய்வதில் மிகுந்த ஆர்வமிருக்கும் புதுப்புது விதத்தில் சிந்தித்து வெற்றி பெறுவார்கள். கதை, கவிதை, கட்டுரை எழுதுவதில் நிகரற்ற புலமை அடைவார்கள்.

இவர்க ளைக் கண்டு வியக்காத மனிதர் இல்லை என்னும் அளவுக்கு சாதனைகள் செய்வார்கள். தோற்றப் பொலிவு மிகுந்த விசுவா சம் கொண்டவர்கள். மிகவும் அதிர்ஷ்டசாலிகள்.

(தொடரும்....)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மீளப் பெறுமாறு ஐ.நாவில் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக கடந்த 2015ஆம் ஆண்டு ஜெனிவா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 30/01 என்ற தீர்மானத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இத்தாலியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இலங்கை தேசாபிமான சர்வதேச அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குறித்த யோசனை, இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது.

அந்த யோசனையானது, இலங்கைக்கும், இராணுவத்திற்கும் எதிரானது. எனவே, இந்த யோசனையை முழுமையாக மீளப்பெற வேண்டும்.

அத்துடன், இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஜெனிவாவில் பதிலளிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் இம்முறை நேரடியான விவாதங்கள் நடைபெறாது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இலங்கை விவகாரம் தொடர்பில் சில உப குழுக்களின் கூட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இம்முறை ஜெனிவா மாநாட்டிற்கு செல்வதற்காக விண்ணப்பித்திருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான விசா அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையானது சர்வதேச அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு பல புலம்பெயர் அமைப்புகளும் கண்டனம் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பௌத்த மதத்துக்குள்ள சவால்கள் தொடர்பில் மகாநாயக்கர்கள் ஆய்வு




(கொழும்பு)

பௌத்த மதத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பில் மல்வத்து, அஸ்கிரிய பீட மகா நாயக்க தேரர்கள் கலந்து கொண்ட விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மல் வத்து மகா விகாரையின் மகா நாயக்க தேரரின் வாசஸ்தலத் தில் நடைபெற்றது.

பௌத்த மத சிந்தனைகளை சிதைக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டதாகவும், முக்கிய விடயங்கள் குறித்து தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் மல்வத்து பீட போசகர் ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு எதிராக கனடாவிலும் ஆர்ப்பாட்டம்









(டொரன்றோ)

முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படவுள்ள மகாவலி அபிவிருத்தி திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கனடாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் டொரன்றோ மாகாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி எனக்கூறும் இந்த அரசாங்கம் திட்டமிட்ட வகையில் முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் நோக்கிலேயே, மகாவலி அபிவிருத்தி திட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக புலம் பெயர்ந்துள்ள தமிழ் உறவுகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், அரசாங்கம் உடனடியாக குறித்த திட்டத்தினை கைவிட வேண்டும் எனவும், இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனவும் அவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது 'தமிழனே விழித்திடு மகாவலியை எதிர்த்திடு' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது டன், வடக்கு- கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் போராட்டங்கள் தொடர்பிலான ஒளிப்படங்களும் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (இ-7)

# இந்த அரசாங்கம் சமயச் சூழலை அழித்துவிட்டது

## மகிந்த ராஜபக்ஷ கவலை



(கொழும்பு)

வானொலி, தொலைக் காட்சி என்பவற்றின் பக்கம் கவனத்தை திருப்பினால் காலையில் குரோதங்களுடன் ஆரம்பித்து மாலையில் குரோதங்களுடனே முடிவடைவதாகவும், அதேபோன்று அரசாங்கம் சமய சூழலையும் அழித்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ருவன்வெலிசாய பௌத்த வழிபாட்டு வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பௌத்த மகா சம்மேளன ஒன்று கூட லில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கத்திலுள்ள சகலரும் தலைவர்கள் போன்று தான் செயற்படுகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவருக்கு எதிராக தூற்றி பேசிக் கொள்கின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு அடிக்கும் சமூகமொன்று இன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அன்று பாடசாலையில் கையினாலும் காலினாலும் தான் அடித்துக் கொண்டார்கள். இன்று கம்பு தடிகளினால் கொலை செய்து கொள்கின்றார்கள்.

இந்த நிலைமை அரசாங்கத் தின் செயற்பாடுகளை முன் மாதிரிகளாக கொண்டே ஏற் பட்டுள்ளது என்பதே எனது நம் பிக்கையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்களத்தையும் பௌத்தத்தையும் தூக்கிப் பிடிக்கும் அரசியல்வாதிகள்

## அமைச்சர் மனோ விசனம்

(கொழும்பு)

இலங்கையின் சிங்கள அரசியல்வாதிகள் நாட்டை விட சிங்களத்தையும், பௌத்தத்தையும் தூக்கிப் பிடிக்கிறார்கள் என தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் சிங்கள அரசியல் தலைவர்களின் இந்த செயற்பாடு காரணமாகவே இலங்கை தேசியம் தோற்றுப் போயுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஹிந்தி இல்லாமல் இந்தியா முன்னேறாது" என இந்திய துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கூறிய கருத்து தொடர்பில் விளக்கமளித்து டுவிட்டரில் அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.




அந்தவகையில் இந்தியர்கள் ஹிந்தியையும், ஹிந்துவையும் தூக்கிப் பிடிக்கிறார்கள். அதேபோல சிங்கள அரசியல்வாதிகள் நாட்டை விட சிங்களத்தையும், பௌத்தத்தையும் தூக்கிப்பிடிக்கிறார்கள் என அமைச்சர் மனோ விசனம் வெளியிட்டுள்ளார். (இ-7)

# பிக்குவின் கத்திக்குத்துக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(தம்புள்ள)

பிக்கு ஒருவரின் கத்திக் குத்துக்கு இலக்கான மூவர் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விகாரையின் கழிவுகளை பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு சொந்தமான இடத்தில் கொட்டியமை தொடர்பில், நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8 மணியளவில் விகாரைக்கு வந்த கான்ஸ்டபிளுக்கும் குறித்த விகாரையின் தலைமை பிக்குவுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதனாலேயே கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள், அவரது மனைவி மற்றும் அவரது சகோதரர் ஆகியோரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது குறித்த கான்ஸ்டபிளின் தாக்குதலுக்கு இலக்கான பிக்கு ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# புலிகளின் தலைவருடன் படம் எடுத்து அரசியல் செய்பவர் அல்ல வைகோ

## கி.வீரமணி சுட்டிக்காட்டு



(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் படம் எடுத்து அரசியல்செய்பவர்அல்லவைகோ என திராவிடர்கழகத்தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

பெரியார் பிறந்த நாள் விழா, அண்ணா பிறந்த நாள் விழா, ம.தி.மு.க. வெள்ளி விழா- வைகோவின் பொது வாழ்வு பொன்விழா என, ம.தி.மு.க சார்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முப்பெரும் விழா ஈரோட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் படம் எடுத்து அரசியல் செய்பவர் அல்ல வைகோ. பிரபாகரனுக்காக அத்தனை அடக்குமுறை சட்டங்களையும் பதம் பார்த்தவர்.

அந்த சட்டங்கள் அனைத்தும் வைகோவிடம் தோற்றுள்ளன. இதற்கு முன் நாம் சந்தித்த எதிரிகள் நாணயமான எதிரிகள். இனிமேல்நாம் சந்திக்கவுள்ளவர்கள் நாணயமற்ற எதிரிகள். எனவே, இனிமேல் போர் வியூகத்தை மாற்ற வேண்டும்.

சமூக நீதி, ஜனநாயகம், மதச்சார்பின்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள சூழலில் அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் திராவிட இயக்கத்திற்கே உண்டு. முதல்வர்கள், பிரதமர்கள் புரட்சியாளர்களாக வர முடியாது. வைகோ போன்றவர்கள்தான் புரட்சியாளர்களாக வர முடியும்.

அவர் எடுக்கும் முடிவுகளைக் கட்டுப்படுத்தும் இயக்கமாகவும் திராவிடர் கழகம் இருக்கிறது. வைகோவைப் பொறுத்தவரை நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்.

இனி நடப்பவை இனத்திற்கும், உங்களுக்கும் பாதுகாப்பாகவும் இருக்கட்டும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# சு.க.தலைவரை கொல்லச் சதி! உடன் விசாரணைக்கு வலியுறுத்து



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரை கொலை செய்வதற்கான சதி நடவடிக்கை தொடர்பில் உடன் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோகண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் இடம் பெற்ற செயலமர்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

நாம் அவசரப்பட மாட்டோம். இருப்பினும், இது தொடர்பில் விரைவாக விசாரணை நடத்தப்பட வேண்டும். கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டில் உண்மைத் தன்மை இருக்கின்றதா? என்பது தொடர்பில் விரைவாக கண்டறிய வேண்டும்.

அவ்வாறு இருப்பதாக இருந்தால், அது தொடர்பில் விரைவாக சட்ட நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். அதன் பிறகுதான், நாம் கட்சி என்ற அடிப்படையில் தீர்மானங்களுக்கு வர முடியுமாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 5 ஆயிரத்திற்கும் அதிக முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த 3 வருட காலப்பகுதியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 5,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஜீ. எச். மனதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பொலிஸார் பக்கச்சார்பான முறையில் நடந்து கொண்டமை, இலஞ்சம் பெற்றுக்கொண்டமை தொடர்பிலும் தமது ஆணைக் குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஜீ. எச். மனதுங்க தெரிவித்தார்.

இவற்றில், 90 வீதமான முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொலிஸ்ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு வடமராட்சி பகுதி மக்கள் தீர்மானித்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் குழந்தைகள் சிறுவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கே மாற்றப்பட்டு வருகின்றனர்.

சுமார் இரண்டு வருடங்களாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு குழந்தை வைத்திய நிபுணர் நியமிக்கப்படாமல் உள்ளார்.


இது தொடர்பில் உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டபோது வைத்தியசாலை தரப்பில் இருந்தோ, வைத்தியசாலை அபிவிருத்தி சங்கமோ, நோயாளர் நலன் புரிச் சங்கமோ தம்மிடம் இது தொடர்பில் கேட்கவில்லை என தெரிவித்துள்ளனர். வடமராட்சியில் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளான பருத்தித்துறை வடக்கு, வட மராட்சி தெற்கு மேற்கு, மருதங்கேணி, மற்றும் தென்மராட்சி பகுதியின் ஒரு பகுதி மக்களும் இந்த வைத்தியசாலையை பயன் படுத்தி வரு கின்றனர்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது நிலையில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்க சுகாதார திணைக்களம் அசமந்தம் காட்டுவதை கண்டித்து விரைவில் போராட்டம் இடம்பெறவுள்ளது. (இ-60)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1507

### சுரேன்

காலத்தின் வளர்ச்சியில் அழிந்த தொழில்களில்



வாடகை சைக்கிள் கடையும் ஒன்று!

### சுரேஷ்


குழந்தைகள் மட்டுமே நேற்றைய பிரச்சினைக்கு



இன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை...

### சுக்ரன்

கடன் வாங்கினேன்னு சொல்றது கேவலமாகவும்



லோன் வாங்கினேன்னு சொல்றது நாகரிகமாகவும் கருதுகின்றனர்

### சுனிதா

அந்நியன்கள் அம்பிகளாகவும் காங்காக்கள் சந்திரமுகியாகவும்



மாறும் நிகழ்வே திருமணம் என்று அழைக்கப்படுகிறது

### சுமித்ரா

ஏன்டா தமிழாசிரியர் காலை பிடிச்சு வாரின...?



நேற்று ஸ்கூல் விட்டதும் அவர்தான் சேர் " நாளை காலை வாருங்க"ன்னு சொன்னாரு

### சுஜிதா

பணம் படைத்தவனிடம் எதிரியும் நண்பன் ஆகின்றான்




நல்ல குணம் படைத்தவனிடம் நண்பனும் எதிரி ஆகின்றான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## ஏமாற்றாதே! ஏமாற்றாதே!



நீண்ட காலத்துக்கு முன்னர், அனான்சி என்ற சிலந்தி வாழ்ந்து வந்தது. அது மிகவும் பேராசை பிடித்ததாக இருந்தது. அதனால், அது தன்னுடைய பொருட்கள் எதையும் மற்றவர்களுடன் எப்போதுமே பகிர்ந்துகொள்ளாது. 'பகிர்ந்துண்டு வாழ்வாரே வாழ்வர்' என்பதை அது புரிந்துகொள்ள வில்லை. ஒரு நாள், அது தன்னுடைய தோட்டத்தில் விளைந்த சுவையான சேனைக் கிழங்குகளைச் சமைத்துக்கொண்டிருந்தது. சேனைக்கிழங்கின் வாசனை அதன் மூக்கைத் துளைத்து மேலும் பசியை உண்டு பண்ணியது. ஆனால், எப்படியோ மதிய உணவு வேளை வரும்வரை பொறுமையுடன் காத்திருந்தது.

அது தன்னுடைய சுவையான சேனைக் கிழங்குகளைச் சாப்பிடத் தயாராக இருக்கும்போது, யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அனான்சிக்கு ஒரே கோபமாக வந்தது. அதே கோபத்துடன் வேகமாக வந்து கதவைத் திறந்தது. பார்த்தால், கோசோ என்ற ஆமை அங்கே நின்றுகொண்டிருந்தது. அது நீண்ட தூரம் பயணித்து வந்த களைப்பிலும் பசியிலும் இருந்தது.

"வணக்கம் அனான்சி, நீ என்ன சமைத்துக்கொண்டிருக்கிறாய்? ஏதோ நல்ல சுவையாக சமைத்து வைத்திருக்கும் வாசனை வருகிறது" என்றது கோசோ.

"ஓ, ஆமாம், இன்று மதிய உணவுக்காக சேனைக்கிழங்குகள் சமைத்திருக்கிறேன்" என்று தயக்கத்துடன் சொன்னது அனான்சி.

"ஓ, அப்படியா? நீண்ட பயணம் முடித்து திரும்பியிருப்பதால் களைப்புடனும் பசியுடனும் இருக்கிறேன். இன்று உன்னுடன் நான் சாப்பிடலாமா?" என்று கேட்டது கோசோ.

அனான்சிக்கு கோசோவுடன் உணவைப் பகிர்ந்துகொள்வதில் சற்றும் விருப்பமில்லை. ஆனால், உணவு நேரத்தில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது அந்தநாட்டின் வழக்கம். அதனால், அனான்சியால் மறுக்க முடியவில்லை. ஆனால், எப்படியிருந்தாலும் கோசோவுடன் சேனைக் கிழங்குகளைப் பகிர்ந்துகொள்ள கூடாது என்ற முடிவுடன் இரு ந்தது.

"அதற்கென்ன தாராளமாக, உள்ளே வா! இந்த இருக்கையில் உட்கார்! நான் உனக்கு சாப்பிட எடுத்து வருகிறேன்" என்று அனான்சி கோசோவிடம் சொன்னது.

இருவரும் சாப்பிடத் தயாரானார்கள். அப்போது, திடீரென்று அனான்சி கோசோவை சாப்பிட விடாமல் தடுத்தது.

"சாப்பிடுவதற்கு முன்னால் கைகளைக் கழுவ வேண்டுமென்பது உனக்குத் தெரியாதா? போய், உன் கைகளைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு வா!" என்றது அனான்சி.

கோசோ தன்னுடைய கைகளைப் பார்த்தது. பயணத்திலிருந்து அப்படியே சாப்பிட வந்ததால் அவை மிகவும் அழுக்காக இருந்தன. அருகிலிருக்கும் ஆற்றுக்குச் சென்று கைகளைக் கழுவிகொண்டுவந்தது கோசோ.

அதற்குள் அனான்சி சாப்பிடத் தொடங்கியிருந்தது. "சேனைக்கிழங்குகள் ஆறிப்போய்கொண்டிருந்தன. அதனால் சாப்பிடத் தொடங்கிவிட்டேன். நீயும் என்னுடன் சாப்பிடத் தொடங்கு!" என்றது அனான்சி.

ஆனால், மறுபடியும் அதே காரணத்தைச் சொல்லி கோசோவை சாப்பிடவிடாமல் திருப்பி அனுப்பியது அனான்சி. பாவம் கோசோ! அது தன்னுடைய கைகளைப் பார்த்தால் மீண்டும் அவை அழுக்காகியிருந்தன. ஆற்றிலிருந்து வீட்டுக்குவரும் வழியில் மீண்டும் அதனுடைய கைகள் அழுக்காகியிருந்தன.

கோசோ மிகவும் சோர்வடைந்து விட்டது. ஆனாலும் மறுபடி ஆற்றுக்குச் சென்று தன் கைகளைக் கழுவிகொண்டு வந்தது. இந்த தடவை கைகள் அழுக்காகிவிடக் கூடாது என்பதற்காக கவனமாகப் புற்களின்மீது நடந்துவந்தது. ஆனால், இந்த முறை அது திரும்பி வருவதற்குள் அனான்சி கிட்டத்தட்ட எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்திருந்தது. ஒரேயொரு சேனைக் கிழங்கு துண்டு மட்டும்தான் கோசோவுக்குக் கிடைத்தது.

கோசோ கோபத்தோடு அவமானத்தோடும் கிளம்பத் தயாரானது. "உன்னுடைய-

சுவையான உணவுக்கு நன்றி! ஒருநாள் நீயும் என் வீட்டுக்கு சாப்பிட வர வேண்டும்" என்று கூறிவிட்டு கோசோ புறப்பட்டுச் சென்றது.

சில நாட்கள் கழித்து, அனான்சிக்கு கோசோவின் அழைப்பு நினைவுக்கு வந்தது. கோசோவின் வீட்டுக்குச் சென்று அறுசுவை உணவு சாப்பிட முடிவுசெய்தது. ஏனென்றால், கோசோவின் சமையல் கைப்பக்குவத்தைப் பற்றி அதற்குத் தெரியும்.

அடுத்த நாள், ஆற்றங்கரைக்கு அடியில் இருக்கும் கோசோவின் வீட்டுக்கு அருகில் அது வந்தது. அனான்சியைப் பார்த்த கோசோ, "வணக்கம் அனான்சி, என் அழைப்பை ஏற்று சாப்பிட வந்ததுக்கு நன்றி. வா, சாப்பிடலாம்!" என்றது. ஆற்றுக்கு அடியில் இருக்கும் தன் வீட்டுக்கு அனான்சியை அழைத்தது. அனான்சியால் இதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை. கோசோவின் சமையலின் கைப்பக்குவத்தை ருசிப்பதற்காக உடனடியாக ஆற்றில் குதித்தது. ஆனால், ஐயோ பாவம்! அனான்சியால் ஆற்றுக்குள்ளே நீந்திச் செல்ல முடியவில்லை. அதனால் நீரின் மேலே மிதக்க மட்டுமே முடிந்தது. இதற்குள் வீட்டுக்குச் சென்ற கோசோ, உணவைத் தயாராக எடுத்து வைத்தது. அனான்சி நீருக்குள் நீந்திச் செல்ல எவ்வளவோ முயற்சிசெய்து பார்த்தது. ஆனால், அதனால் முடியவில்லை. அனான்சிக்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. அது தன்னுடைய 'கோட்' பொக்கெட்டில் கற்களை எடுத்து போட்டுக் கொண்டது. அனான்சி யின் எடைக் கூடியதால் எளிதாக நீந்திச் சென்று கோசாவின் வீட்டை அடைந்தது.

அனான்சி கோசோ சாப்பாட்டு மேசையில் எடுத்துவைத்திருந்த சுவையான உணவைப் பார்த்தது. அது அவசர அவசரமாக சாப்பிடத் தயாரானது. "அனான்சி, சாப்பிடும் போது நாம் 'கோட்' அணிந்து கொண்டு சாப்பிடமாட்டோம். அது நம்முடைய வழக்கத்தில் கிடையாது. அதனால், 'கோட்'டைக் கழட்டிவைத்துவிட்டுச் சாப்பிட வா!" என்றது. அனான்சி கற்களைப் போட்டு வைத்திருந்த 'கோட்'டைக் கழட்டியது. உடனே, ஆற்றின் மேலே மிதக்கத் தொடங்கியது.

அந்தச் சுவையான உணவைக் கோசோ ரசித்து சாப்பிடுவதை மேலேயிருந்து பார்த்தது அனான்சி. அது தன்னுடைய தவறுக்காக வருந்தியபடி சோகத்துடன் கரையேறியது.

## பழமொழியும் விளக்கமும்

➢ "மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே"

உண்மையிலே இது "மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே" என்பதே சரி. மண்குதிர் என்பது ஆற்று நீரின் சுழற்சியால் ஏற்படும் மணல்மேடுகள். இது பாறை போல் காட்சியளித்தாலும், அதன் மீது ஏறினால் அது நீரில் அமிழ்ந்து விடும். எனவே மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது. குதிர் என்பது குதிரை என திரிந்து விட்டது.

➢ "ஆற்று நீர் வாதம் போக்கும் அருவி நீர் பித்தம் போக்கும் சோற்று நீர் இரண்டும் போக்கும்"

ஆறு மலையிலிருந்து வருவதால் பல மூலிகைகள் அதில் கலந்திருக்கும். அதில் குளித்தால், வாதம் உள்ளிட்ட நோய்கள் நீங்கும். அது போன்றே அருவி நீரில் பல கனி(ம)ச் சத்துக்கள் மிகுந்து காணப்படுவதால் இதனைக் கனிமச்சத்து நீர் என்றும் கூறலாம். பருகினால் அல்லது இதில் குளித்தால் பித்தநோய், கல்லீரல் தொடர்புடைய நோய்கள், கீழ் வாதம் உள்ளிட்ட பல நோய்கள் போகும். சோற்று நீர் என்பது நீராகாரம். இது அருந்திவர வாதம், பித்தம் இரண்டும் நீங்கும்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.09 17

❖1858-ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

❖1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தில் கூட்டமைப்பினருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 4,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கனக்கானோர் காயமடைந்தனர். இதுவே அமெரிக்காவில் ஒரே நாளில் அதிக இரத்தக்களரியை ஏற்படுத்திய போராகும்.

❖ 1956-அவுஸ்திரேலியாவில் முதன் முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப்பட்டது.

❖1976-நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர்பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.

❖1997-பெரியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

❖2004-இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖1864-அநாகரிக தர்மபால, இலங்கை பௌத்த அறிஞர் (இ. 1933)

❖1879-ஈ.வெ. இராமசாமி, இந்திய அரசியல்வாதி, திராவிடர் கழக நிறுவனர் (இ. 1973)

❖1889-வ.ரா.,தமிழக எழுத்தாளர்

❖1895-வெ.சாமிநாத சர்மா, தமிழறிஞர் (இ. 1978)

❖1897-வில்லியம் கொபல்லாவ, இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (இ. 1981)

❖1906-ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இலங்கையின் 2 ஆவது அரசுத்தலைவர் (இ. 1996)

❖1915-மக்புல் ஃபிதா உசைன், இந்திய ஓவியர், இயக்குநர் (இ. 2011)

❖1930-லால்குடி ஜெயராமன், இந்திய வயலின் கலைஞர், இசையமைப்பாளர் (இ. 2013)

❖1950-நரேந்திர மோடி, இந்தியாவின் 15 ஆவது பிரதமர்

❖ 1953-கி.பி.அரவிந்தன், ஈழத்து எழுத்தாளர், கவிஞர் (இ. 2015)

❖1986-ரவிச்சந்திரன் அஸ்வின், இந்தியத் துடுப்பாளர்

❖1965-பிறையன் சிங்கர், அமெரிக்க இயக்குநர்

### இறப்புகள்

❖ 1959-கு.வன்னியசிங்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1911)

❖1953-வி.க.,தமிழறிஞர் (பி. 1883)

❖1979-எம்.ஆர்.ராதா, தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் (பி. 1907)

### சிறப்பு நாள்

❖ஆத்திரேலியக் குடியுரிமை நாள்

❖ஆசிரியர் நாள் (ஒண்டுராசு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 |
| தக்காளி | 40 | 30 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 140 | 60 | 160 |
| கரட் | 160 | 180 | 300 |
| பூசணி | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 100 |
| பயற்றங்காய் | 80 | 70 | 120 |
| லீக்ஸ் | 100 | 90 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 |
| போஞ்சி | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 75 | 120 |
| கீரை-1பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 90 | 200 |
| முள்ளங்கி | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 120 | 80 |

## “மகிந்த தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சி”

# ஈழப்போருக்கும் காங்கிரஸிற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை!

## திருநாவுக்கரசர் கூறுகிறார்

(சென்னை)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே சில கருத்துக்களை முன்வைக்கிறாரென தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கைப் போருக்கும் காங்கிரஸிற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

“இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறுதான் காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

அதாவது இச்சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டுமா? அல்லது வேண்டாமா? ஆகிய விடயங்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

குறித்த விடயத்தில் சந்தேகநபர்களை விடுதலை செய்ய. சட்டத்தில் அனுமதி இருந்தால் ஆளுநர் அதனை மேற்கொள்ள வேண்டியது தான்.நாம் அதனை தடுக்கவில்லை.

ஆனால் அதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றமையினால் தான் அதனை தடுக்கின்றோம்.

மேலும் தமிழக அரசு பரிந்துரை செய்து அனுப்பியும் சட்டப்படி வாய்ப்பு இல்லாததன் காரணமாகவே ஆளுநர் கையெழுத்திடவில்லை.

ராஜீவ்காந்தி கொலையில் வெளிநாட்டு சதி உள்ளது என்ற கோணத்தில் விசாரணைகள் நடைபெற்று வருகின்ற நிலையில், 7 பேரின் விடுதலையை தமிழக அரசு வலியுறுத்துவது தவறாகும்.

இதேவேளை இலங்கையில் அமைதி ஏற்பட அந்நாடு எடுத்த முடிவுக்கும், காங்கிரஸிற்கும் எந்ததொரு சம்பந்தமும் இல்லை. மேலும் மகிந்த தன்னை காப்பாற்றிக்கொள்ளவே சில கருத்துக்களைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார்.

ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு உதவியதே காங்கிரஸ் கட்சிதான். அத்துடன் ராஜீவ்காந்தி கொலை செய்யப்படாமல் இருந்திருந்தால் பிரபாகரன் உயிருடன் இருந்திருப்பார்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொலிஸ்மா அதிபர் பூஜித உடன் இராஜினாமா செய்ய வேண்டும்

### உதய கம்மன்பில வலியுறுத்து



(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொலை செய்வது குறித்து வெளியான தகவல்களின் அடிப்படையில் நேர்மையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர இராஜினாமா செய்ய வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதியைக் கொலை செய்வது தொடர்பான குற்றச்சாட்டு வெளியாகி 5 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை பிரதான சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை.

பொலிஸ் அதிகாரியொருவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் போது அதனை விசாரணை செய்வதற்கு விசேட விதிமுறைகள் உள்ளன.

இந்நிலையில், இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின், அவரால் சாட்சியாளருக்கு அச்சுறுத்தல் வரலாம்.

அத்துடன், ஆதாரங்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம். எனவேதான், சந்தேகநபர் கைது செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்” என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இத்தாலியில் தமிழின அழிப்பு கண்காட்சி!

(ஜெனோவா)

இத்தாலியில் தமிழின அழிப்பு கண்காட்சி ஊர்திப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் ஜெனோவா நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.



இதன்போது இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

இத்தாலி மக்களுக்கு இதன்போது துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டதுடன், தமிழர் நீதிக்கான பயணம் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழின அழிப்பின் கண்காட்சி ஊர்தி சுவிஸின் Lausanne நகரை நோக்கி தனது பயணத்தினை ஆரம்பித்துள்ளது.

குறித்த நிகழ்வில் அதிகளவான புலம்பெயர் உறவுகள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்திருந்தனர். (இ-7)

## 13 வயதுச்சிறுமி துஷ்பிரயோகம் இராணுவச் சிப்பாய் கைது!

(கொழும்பு)

சாலியவெவ - நீலபெம்ம பிரதேசத்தில் 13 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகப்படுத்திய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சாலியவெவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருமணமான 30 வயதுடைய நீலபெம்ம பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும், அவர் இரணைமடு இராணுவ படைத்தளத்தில் பணிபுரிபவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விடுமுறைக்காக வீடு சென்றிருந்த போதே இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைகளுக்காக புத்தளம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாள்.

சந்தேக நபரான இராணுவச் சிப்பாயை புத்தளம் மேல் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாலியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## திகன வன்முறைச் சம்பவத்தில் அமித்தை சிக்க வைத்தவர்

### டி.ஐ.ஜி.நாலக சில்வா-கம்மன்பில



(கொழும்பு)

திகன வன்முறைச் சம்பவத்தின் போது எந்த விதமான குற்றமும் செய்யாத மஹாசோன் பலகாயவை தொடர்புபடுத்த பொய்யான கதை சோடித்து அப்பாவி நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களை சிறையில் போட காரணமாக இருந்தவர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவே என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் மகிந்த ஆதரவு குழு பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாலக டி சில்வா தான் கிரிபத்கும்புரே சோபித தேரரின் வயிற்றுப் பகுதிக்கு காலால் உதைத்தவர்.

அத்துடன், சிறையிலுள்ள மஹாசோன் பலகாயவின் தலைவர் அமித் வீரசிங்கவிடம் திகன சம்பவத்தின் பின்னால் இருந்தவர் கோத்தபாய என வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு இந்த டீ.ஐ.ஜி. நாலக்க சில்வா வற்புறுத்தியுள்ளார். அவ்வாறு வாக்கு மூலம் வழங்கினால் அமித் வீரசிங்கவை விடுதலை செய்வதாகவும் நாலக சில்வா கூறியுள்ளார்.

விடுதலை செய்வது மட்டுமல்ல வெளிநாட்டில் குடும்பத்துடன் சென்று தங்குவதற்கு வசதி செய்து தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்களின் மூலம் ஒன்று விளங்குகின்றது. அதுதான், இந்த டி.ஐ.ஜி. நாலக டி சில்வா என்பவர் கோத்தபாயவுக்கு எதிரானவர் எனவும் கம்மன்பில எம்.பி. மேலும் தெரிவித்தார்.(இ-7)

## இரத்தினபுரியில் பாரிய காடழிப்பு! வனஜீவராசிகளுக்குப் பாதிப்பு



(கொழும்பு)

இயற்கை வளங்களுக்குப் பெயர் பெற்ற இரத்தினபுரி மாவட்டத்தில் பாரதூரமான காடழிப்பு, தீ வைப்பு போன்ற பல நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இப்பகுதி காடுகளில் வசிக்கும் உயிரினங்களுக்குப் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாக வன பரிபாலன துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதிகளை உள்ளடக்கியுள்ள சிங்கராஜவனம், உடவளவ சரணாலயம் உட்பட காடுகள் மற்றும் இவற்றை அண்மித்த பிரதேசங்களில் சட்டவிரோதமாகவும் அரச ஒத்துழைப்புடனும் இடம்பெற்று வரும் காடழிப்பு, தீ வைப்பு நடவடிக்கைகளினால் இவற்றில் வசிக்கும் உயிரினங்கள் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன.

இந்நிலைமைகளினால் நாளுக்கு நாள் உயிரினங்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாக ஜீவகாருண்ய சுற்றாடல் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

எனவே இவ்விடயத்தில் பொறுப்பு வாய்ந்தவர்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-7)

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடிக் காடுடைய சுடலை பொடி பூசிஎன் உள்ளங் கவர் கள்வன்... ~ தேவாரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தோடுடைய செவியன் விடை ஏறி வராதது ஏன்?

வகுப்பறையொன்றில் ஆசிரியர் மாணவர்களுக்கு சமய பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

*திருவாய் மலர்ந்தழுத...* என்ற பொருளில் திருஞானசம்பந்தரின் கதையை ஆசிரியர் கூறுகிறார்.

சீர்காழிப் பதியில் சிவபாதவிருதையரின் குழந்தை திருஞானசம்பந்தர்.

அந்தணர் குலத்தைச் சார்ந்த சிவபாத விருதையர் தன் மூன்று வயது நிரம்பிய ஞானசம்பந்தக் குழந்தையுடன் கோயிலுக்குச் சென்றார்.

குழந்தையை கேணிப் படியில் இருத்தி விட்டு அவர் நீராடினார். தந்தையைக் காணாத குழந்தை அழுதது. ஞானசம்பந்தக் குழந்தையின் குரல் கேட்டு அம்மையும் அப்பனும் இடப வாகனமாகிய எருதில் ஏறி, குழந்தை அழுகின்ற சீர்காழிப்பதிக்கு வந்தனர். குழந்தைக்கு ஞானப்பால் கொடுத்துச் சென்றனர்.

கேணியில் நீராடி விட்டு வந்த சிவபாத விருதையர் தன் குழந்தையின் வாயில் பால் இருப்பது கண்டு அதிர்ச்சியுற்றார். உனக்குப் பால் தந்தது ய்ார் என்று கேட்டார்.

அதற்கு ஞானசம்பந்தக் குழந்தை வானத்தைக் காட்டி

*தோடுடைய செவியன் விடை ஏறியோர்...* என்று பாடியது என ஆசிரியரின் கற்பித்தல் அமைந்தது.

ஆசிரியர் கூறிய கதையை ஆர்வத்தோடு கேட்ட மாணவர்கள்; ஆசிரியரைப் பார்த்து ஞானசம்பந்தக் குழந்தை, தந்தையைக் காணாமல் அழுதபோது, விடையேறி வந்த சிவனும் பார்வதியும் இப்போது ஏன் இங்கு வருவதில்லை.

எத்தனையோ பேர் அழுகின்றனர். தாயை, தந்தையை, பிள்ளையை, உறவுகளை இழந்த துன்பத்தில் அழுகின்ற அந்த அழுகுரல் கேட்டு சிவனும் பார்வதியும் எருதேறி வரலாமல்லவா என்று கேட்டனர்.

அதற்கு ஆசிரியர் விடையேறி வராததற்கு இரண்டு காரணம் உண்டு என்றார். என்ன காரணம் சேர் என்று கேட்டனர் மாணவர்கள்.

மாணவர்களே! ஒரு காரணம் எருதில் சிவன் வந்தால் வந்த எருதை நம்மவர்கள் இறைச்சிக்கு விற்று விடுவார்கள். இறைச்சிக்கு வாங்கியவர்கள் இதோ மிகப்பெரிய எருதை இறைச்சிக்கு வெட்டப் போகிறோம் என்று விளம்பரம் செய்வார்கள். அந்தப் பயம் காரணமாக சிவன் எருதில் ஏறி வரமுடியாமல் இருக்குது என்றார்.

சரி இரண்டாவது காரணம் என்ன சேர் என்றார்கள் மாணவர்கள். அதற்கு ஆசிரியர் சொன்னார் மாணவர்களே! காணாமல்போனவர்கள், யுத்தத்தில் இறந்தவர்கள் இவர்கள் தொடர்பில் சிவனும் பார்வதியும் வந்தால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் இருக்க, புலித்தோல் தரித்த இவர் யார். இவரை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துங்கள் என்று நம் அரசியல்வாதிகள் மன்றில் முறைப்பாடு செய்வர்.

ஆகையால்தான், நம் துன்பம் கண்டு சிவன் கவலை கொண்டிருந்தாலும் விடையேறி இங்கு வரமுடியாமல் இருக்கிறார் என்று ஆசிரியர் கூற, மாணவர்கள் அமைதியாகினர்.

## தாக்கியவரை பழிவாங்க வீட்டுக்குள் நுழைந்து கத்தியால் குத்தியவர் தப்பியோட்டம்

(குடத்தனை)

வடமராட்சி கிழக்கு குடததனை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றின்போது ஏற்பட்ட கைகலப்பு பாரதூரமாக சென்ற நிலையில், அதில் சம்பந்தப்பட்டவர்கள் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொண்டனர்.

இந்த சம்பவத்தில் அந்த பகுதியை சேர்ந்த தந்தையான அந்தோனிமுத்து, அவருடைய மகன் அமல்ராஜ் ஆகியோர் கத்திக் குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

வடமராட்சியில் நடைபெற்ற திருமண நிகழ்வின் போது மாலை வேளை மதுபோதையில் இருவர் முரண்பட்டு கைகலப்பில் ஈடுபட்டனர்.

அதன்போது ஒருவர் மற்றொருவரை கடுமையாக தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் அன்றைய தினம் நள்ளிரவு தன்னை தாக்கியவரின் வீட்டுக்குள் புகுந்து தன் மீது தாக்குதல் நடத்தியவரையும் அவருடைய மகனையும் கத்தியால் குத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கத்திக் குத்துக்கு இலக்கான இருவரும் சிகிச்சைக்காக மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (மு)

## எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

எரிபொருள் விலை உயரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் சுஜித் சமந்த இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"இன்றைய கால எரிபொருள் விலை உயர்வால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 44% ஆக இருந்த ஆழ்கடல் மீன்பிடி வருமானம் இன்று பூச்சியத்தைத் தொட்டுள்ளது.

இது தொடர்பில் ஆட்சியாளர்களை சந்தித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் சிறு சிறு போராட்டங்களை மேற்கொண்டும் எந்த பலனுமற்றுப் போனது.

மீன்பிடித்துறை அமைச்சரோ நிதி அமைச்சர் பக்கம் விரலை நீட்டுகிறார்.

இதில் இன்னும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் 2 மாத காலமாக மீன்பிடித்துறை அமைச்சர் மக்கள் சந்திப்பை மேற்கொள்ளவில்லை.

இப்படியிருந்தால் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எவ்வாறு?

இத்தகைய அசமந்தப் போக்கை தடுத்து, எம் மீனவர்களின் நலனிற்காக வெகு விரைவிலேயே ஒரே நாளில் நாடுபூராக ஆர்பாட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்" என எச்சரித்துள்ளார். (மு)

## தெல்லிப்பளையில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவ அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கான விசேட நடமாடும்சேவை தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நாளை 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நேற்று முன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற உத்தியோகபூர்வ பணி ஜனாதிபதி நடமாடும் சேவையில் கலந்து கொண்டு டோக்கன் பெற்றுக் கொண்டவர்கள் இந்த விசேட நடமாடும் சேவையில் கலந்து கொண்டு சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவ அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுமாறு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ச.சிவஶ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார். (மு)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ் வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தவசிக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில மடுமாதா ஆலயப் பிரதேசம, மடுமாதா ஆலயம், முகந்தாங்குளம்2ஆவதுபண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சாதிக்க முடியுமே...

- எதையும் சாதிக்க முடியும் என்கிற உள்ளங்கள ஒருபோதும் சோர்வடைவதில்லை. சாதித்த மனிதர்களுக்கு மட்டுமே பிறருக்குப் போதிக்கின்ற வாய்ப்புண்டு. ஏன் தெரியுமா? அவர்கள்தான் நல்ல கருத்தைச் சொல்லி முன் னேற்றம் அடையச் செய்வார்கள். முயற்சி என் கின்ற சிறகுகளை விரித்துப் பறந்தால்தான் வெற்றி என்கின்ற இலக்கை அடையமுடியும். சிறகுகளை விரிக்காமல் பறக்க முடியாது. அதுபோல முயற்சி இல்லாமல் வெற்றியைப் பெறமுடியாது. அவரவர் திறமைக்கேற்ப வெற்றி வாய்ப்புக்கள் உள்ளன. வெற்றி பெற்றால் மட்டும் போதுமா? சாதனைகள் புரிந்திட வேண்டும். சாதனைகள் புரிந்தால்தான் சாதிக்க முடியும். ஆகவே நம்முடைய எதிர்பார்ப்புகள் எல்லாமே ஏதாவது ஒரு வகையில் வெற்றியிலக்கை நோக்கி இலட்சியப் பாதையினை அமைத்துக்கொண்டால் சாதிக்கலாம். சாதிக்க முடியும் என்கிற உயர்ந்த நோக்குடன் போராடினால் வாழ்வில் சாதித்துக் காட்டவும் முடியும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தொண்டாற்ற முனைந்து நில்



நாம் நமது வாழ்வைச் சிக்கலில்லாமல் இனிமையாக அமைத்துக் கொள்ள வேண்டுமானால் உடலை நலமுடன் வைத்துக் கொள்ளவும் மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளவும் வேண்டும். மனக்களங்கங்கள் அனைத்தும் தன் முனைப்பிலிருந்து தான் உண்டாகின்றன. பேரியக்க மண்டல விரிவாக அமைந்து இயங்கும் அருட்பேராற்றலால் ஒவ்வொரு தோற்றமும் வளர்ச்சியும், நீடிப்பும், முடிவும் நடை பெறுகின்றன. மனிதனும் அவ்வாறே!

பெற்றவர்கள், தாய் தந்தையர் சமுதாயத்தின் எண்ணிறந்த மக்களுடைய உழைப்பால் விளைந்த பொருட்களைக் கொண்டே ஒருவன் வளர்கிறான், வாழ்கிறான். கல்வி, தொழில், செல்வாக்கு இவற்றைச் சமுதாயம் அளிக்கின்றது. எனவே, தனி மனிதன் எதைக் கொண்டு தன் முனைப்புக் கொள்வது? இவ்வுண்மையினை உணர்வதோடு, மறவாமல் நினைவுகொள்வதால் தன்முனைப்பு என்ற மயக்கப் புகையில் சிக்காமல் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள முடியும். தன்முனைப்புத் திரை நீங்கினால் அறுகுணங்களும் பொறாமை, கடும்சொல், பகைமை இவையும் எழ இடமில்லை.

இந்த மனோநிலையில் தான் மனிதனின் மனம் தூய்மையாக இருக்க முடியும். இத்தகைய உண்மை விளக்கம் பெறவும் அந்த விளக்கத்தின் ஒளியில் வாழ்வைச் சீரமைத்துக் கொண்டு உடல் நலத்துடனும், பொருள் வளத்துடனும் சிறப்பாக வாழவும் வழி செய்வது குண்டலினி யோக முறை. இந்தப் பெருமை வாய்ந்த யோகத்தின் நான்கு கூறுகளாகிய தவம், தற்சோதனை, குணச்சீரமைப்பு, அறிவின் முழுமைப்பேறு இவற்றைச் செம்மையாகப் பயின்று சிறப்பாக வாழும் நீங்கள் எல்லோரும் இந்தச் செந்நெறியின் பெருமையை உங்கள் அறவாழ்வின் மூலம் உலகுக்கு உணர்த்துங்கள். எல்லா வளமும் ஓங்கிய உலகுக்கு உள்ள ஒரு குறைபாடு ஆன்மீக விளக்கம் இன்மை. இதனை முழுமை செய்து மனித குலத்துக்குத் தொண்டாற்ற நீங்கள் ஒவ்வொருவரும் முனைந்து நில்லுங்கள்.

# யாழ். இந்துக்கல்லூரியை வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி



J/Kokuvil Hindu College Cricket - "Under-15"

சிறிலங்கா கிரிக்கெட் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் 15 வயதுக் குட்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதிச் சுற்றுப் போட்டிகள் நடந்து வருகின்றன.

அந்தவகையில் கடந்த 15ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. இப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 44.01 ஓவர்கள் இறுதியில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டது.

அவ் அணிக்காக லக்ஸ்மன் 28, அஜன் 22, பிரவீன் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பிரியத்திரன் 5 விக்கெட்டுக்களையும் விசாகன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் கஜன் 37, கவிவர்மன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கௌதமன் 5 விக்கெட்டுக்களையும் ஜெருசன் ஜோன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்று களத்தில் நின்றதால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது. (க)

# வடக்கின் கில்லாடி
## கால்பந்தாட்ட தொடர் ஆரம்பம்

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியானது இம்முறை "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் 15 ஆம் திகதி சனிக்கிழமை




தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டி யாழின் கில்லாடி யார்? என்னும் பெயரிலேயே இரண்டு வருடங்களாக நடத்தப்பட்டது. அந்த இரண்டு வருடங்களும் குருநகர் பாடும்மீன் அணி சம்பியனாகியிருந்தது.

இந்நிலையில் இவ்வருடச் சுற்றுப்போட்டியானது விஸ்தரிக்கப்பட்டு, வடக்கில் கில்லாடி என்னும் தொனிப்பொருளில் வடமாகாணம் தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண லீக்கிலிருந்து 17 அணிகளும், வடமராட்சி லீக்கிலிருந்து 4 அணிகளும், கிளிநொச்சி லீக்கிலிருந்து 3 அணிகளும், தீவக லீக்கிலிருந்து 3 அணிகளும், வலிகாமம் லீக்கிலிருந்து 2 அணிகளும், மன்னார் லீக்கிலிருந்து 2 அணிகளும் மற்றும் முல்லைத்தீவு லீக்கிலிருந்து 1 அணியுமென மொத்தமாக 32 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

போட்டிகள் யாவும் நொக்கவுட் முறையில் இடம்பெறவுள்ளது. இதற்காக அணிகள் ஏ. பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இரண்டு பிரிவுகளிலிருந்தும், தலா ஒவ்வொரு அணிகள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப்போட்டியானது நடத்தப்படவுள்ளது. (க-26)

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின்
## மாபெரும் தாச்சிப்போட்டி முடிவுகள்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடைபெற்று வரும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரில் இன்று 17.09.2018 நடைபெறவுள்ள காலிறுதிப்போட்டியில் கைதடி வடக்கு செவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வடக்கின் கில்லாடி உதைபந்தாட்டம் சென். மேரிஸ் அணி இலகு வெற்றி



அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியானது இம்முறை "வடக்கின் கில்லாடி யார்" என்னும் தொனிப்பொருளில் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதல் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து குருநகர் சென்.றொக்ஸ் அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

சென்.மேரிஸ் அணி சார்பாக, மதி, நிதர்சன் மற்றும் சுபோதரன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

ஆட்டநாயகனாக சென்.மேரிஸ் அணியின் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் நகரோட்டப்போட்டி முடிவுகள்



மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 45ஆ வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான நகரோட்டப் போட்டியானது கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

10 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த நகரோட்டத்தில் பெண்களில், பண்டத்தரிப்பைச் சேர்ந்த மேரி வினுஷா லிவிங்ஸ்டன் உதயகுமார் பெற்றுக்கொண்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த தர்மபாலசிங்கம் தர்மிகா இரண்டாமிடத்தையும், மயிலங்காட்டைச் சேர்ந்த வி.பாஸ்கரன் ஜானு மூன்றாமிடத்தையும், கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த லிங்கேஸ்வரன் சதுர்த்திகா நான்காமிடத்தையும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த லோகேந்திரன் மங்கையற்கரசி ஐந்தாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.



அதேயளவு தூரம் கொண்ட ஆண்களுக்கான ஓட்டத்தில், பண்டத்தரிப்பு சாந்தையைச் சேர்ந்த கிருஷ்ணன் ஜெயந்தன் முதலிடத்தையும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த லிவிங்ஸ்டன் உதயகுமார் அன்ரன் ராஜ்குமார் இரண்டாமிடத்தையும், மல்லாகம், கோட்டைக்காட்டைச் சேர்ந்த உதயகுமார் டிலக்சன் மூன்றாமிடத்தையும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த தர்மபாலசிங்கம் தனுசியன் நான்காமிடத்தையும், மல்லாகம் கோட்டைக் காட்டைச் சேர்ந்த ரவீந்திரன் ஹறிஷ் ஐந்தாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (க-26)

## இராமேஸ்வரம் மீனவர்...

இதனிடையே, கச்சதீவுக்கும் தனுஷ் கோடிக்கும் இடையில் மீன்பிடித்துவிட்டு கரை திரும்பும் போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தியதாகவும் 100 க்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த பல லட்சம் பெறுமதியான மீன்கள் மற்றும் மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்தி இப்பகுதியில் நின்றால் கைது செய்வோம் என எச்சரிக்கை விடுத்து விரட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (மு-281)

## ஜனாதிபதி மைத்திரி...

தொடர்பில் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எட்டு அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பில் ஆராய நேற்று அங்கு சென்றிருந்தார்.

அங்கு சென்று கைதிகளை சந்தித்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் மேற்குறித்த உறுதிமொழியை வழங்கினார். (மு)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த...

காரில் பயணித்த 8 பேரில் 4 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காரின் சாரதியும் சிறுவன் ஒருவனும் காரில் இருந்து பாய்ந்து தப்பித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த இசைஞானவதி யோகரத்தினம் (வயது-56), அவரது இளைய மகளான சுவீடனில் வசிக்கும் கமலநாதன் சிவரஞ்சனி (வயது-30), மூத்த மகளான காண்டீபன் யமுனா ரஞ்சனி (வயது-32), மகளான காண்டீபன் டிசாலினி (வயது-13) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

சுவீடனில் வசிக்கும் ஜேம்ஸ் கமலநாதன் (வயது-34), அவரது மகள் கமலநாதன் ஜெசிகா (வயது-6) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த முத்தையா ரெட்டியார் (வயது-53) என்ற காரின் சாரதி விபத்தையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த கடவையில் கடந்த ஆண்டில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் ஐந்து வயது மகனும் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு-281,250,315)

## 20ஆவது திருத்தம்...

நாட்டிற்குப் பயனற்ற ஒன்றாகும் என முன்னாள் ஜனாதிபதி-மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஜய ஸ்ரீ மகா போதியில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

20ஆவது திருத்தச் சட்ட மூலம் தோல்வியான ஒரு முயற்சியாகும். அதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்படல் வேண்டும். இவர்கள் குறுக்கு வழியில் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர். உயர் நீதிமன்றம் அதற்கு இடமளிக்க மாட்டாது.

நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்துமாறே பொது மக்களும் அன்று வீதிக்கு வந்து அரசாங்கத்தைக் கேட்டனர். இருப்பினும், அதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்த விதமான பதிலையும் அளிக்கவில்லையென வும் அவர் மேலும் கூறியுள்ளார். (மு)

# வடக்கில் நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணியை சீனாவிடம் பறித்து இந்தியாவிடம் வழங்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கையை நீக்கிவிட்டு அதனை இந்திய நிறுவனங்களிடம் வழங்குவதற்கு கொழும்பு அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புவிசார் அரசியல் கரிசனைகளை அடுத்தே, கொழும்பு அரசு இந்த முடிவுக்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறு பொதிகளாக வடக்கு கிழக்கில், வீதிகளை அமைப்பதற்கு சர்வதேச அளவில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டது. அதற்கு 44 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இதையடுத்து அமைச்சரவையினால், நியமிக்கப்பட்ட குழுவினால், வடக்கு மற்றும் கிழக்குக்கு என தலா ஒரு பொதி, சினோ ஹைட்ரோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

ஏனைய பொதிகள், சீ-சீ-என்-எம் கூட்டு முயற்சி, கேழ்ய வீரசிங்க நிறுவனம், பொறியாளர் மற்றும் உசாத்துணை நிறுவனம், நவ லோகா கட்டுமான நிறுவனம் ஆகிய வற்றுக்கு அளிக்கப்பட்டன.

ஆனால், இந்தியாவின் எக்சிம் வங்கியின் ஊடாக, நிதியிட்டு வடக்கு மாகாணத்தில சில வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணியை மேற்கொள்ள முடியும் என்றும் அதனை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குமாறும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக, இந்திய அதிகாரிகள் கோரியிருந்தனர்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் குறிப்பாணை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்தியத் தூதரகம் இரண்டு ஒப்பந்தகாரர்களை ஒழுங்கு செய்துள்ளது. ஒன்று இந்திய அரசுத்துறை நிறுவனமான இர்கோன் மற்றது ஒரு பகுதி இந்திய அரசத்துறை நிறுவனமான, ஐஎஸ் அன்ட் எப்எஸ் போக்குவரத்து வலையமைப்பு நிறுவனம்.

எனவே, வடக்கு மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளைப் சீரமைப்பதற்காக சினோ ஹைட்ரோ நிறுவனத்துக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பொதியை இந்திய நிறுவனங்களில் ஒன்றுக்கு வழங்குவது விவேகமானதாக இருக்கலாம்.

சினோஹைட்ரோ நிறுவனம் ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில், வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான முதலாவது ஒப்பந்தப் பொதிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக சீன ஒப்பந்தகாரர்களின் தலையீடுகள் குறித்து இந்திய அரசு அண்மையில் தீவிரமான கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தது.

இது ஒரு புவிசார் அரசியல் கரிசனையாக இருப்பதால், அண்டை நாட்டுடன், இலங்கை நல்லுறவைப் பேண வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இதன்போது, கடந்த காலத்தில் இந்திய அரசால் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட உதவி மற்றும் ஒத்துழைப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அந்த குறிப்பாணையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால், வடக்கில் சினோஹைட்ரோ நிறுவனம் நெடுஞ்சாலை சீரமைப்பு பணிகளை முன்னெடுக்க முடியாது.

இந்திய அதிகாரிகள் கோரியபடி, இரண்டு இந்திய நிறுவனங்களும் திட்டங்களை முன்வைப்பதற்கு அழைப்பு விடுக்க அமைச்சரவையின் அனுமதி கோரப்படவுள்ளது.

இவ்வாறு திட்டம் கோரப்படவுள்ள வீதிகளில், தலைமன்னார் தொடக்கம் வவுனியா ஊடாக திருகோணமலை வரையான-208.6 கி.மீ நெடுஞ்சாலை முதலாவதாகும்.

அடுத்து, யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை வரையான நெடுஞ்சாலையாகும். இதற்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன், முல்லைத்தீவு, கொக்கிளாய் பாலம் வழியாக திருகோணமலை வரையான, 196 கி.மீ நெடுஞ்சாலை அல்லது பருத்தித்துறை, மருதங்கேணி, கொக்கிளாய் பாலம் வழியாக, திருகோணமலை வரையான 220.3 கி.மீ நெடுஞ்சாலை என இரண்டு தெரிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (மு)

# 30 வருட போர் வடுக்களை 3 வருடத்தில் தீர்ப்பது கடினம்!

## -விஜயகலா மகேஸ்வரன் எம்.பி

(யாழ்ப்பாணம் )

30 வருட கால போரின் வடுக்களை மூன்று வருட காலத்தில் தீர்ப்பதென்பது சாதாரண விடயமல்லவென விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கான உத்தியோகபூர்வ பணி ஜனாதிபதி மக்கள் சேவை ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகின்றன எனினும் 30 வருடமாக நிலவிய போரின் வடுக்களிற்கு 3 வருடத்தில் தீர்வு காண்பது என்பது சாதாரணவிடயமல்ல. எனினும் இந்த நல்லாட்சி அரசாங்கமானது மூன்று ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. மக்களுக்கு செய்யவேண்டிய பலவற்றை செய்துள்ளது எஞ்சியுள்ள காலப்பகுதியில் ஏனையவற்றை செய்யும் என விஜயகலா மகேஸ்வரன தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த விஜயகலா மகேஸ்வரன், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே வடக்கில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சியில் ஜனநாயகம் என்ற சொல்லுக்கே இடமில்லாத நிலையே காணப்பட்டது.இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கில் இராணுவத்தினரிடமிருந்த காணிகளை விடுவித்திருக்கிறோம். மேலும் பல வேலைத்திட்டங்களை இந்த நல்லாட்சி அரசினால் நாம் செய்து வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-101,9)

# இலங்கைக்கு கடத்தவிருந்த கடலட்டைகள் பறிமுதல் கடத்தல் காரர்கள் தப்பி ஓட்டம்

(மன்னார்)

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த ரூ3 லட்சம் மதிப்பிலான உயிர் கடல் அட்டைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய விசைபடகை பறிமுதல் செய்த மண்டபம் மெரன் பொலிஸார் தப்பி ஓடிய கடத்தல்காரர்களை தனி படை அமைத்து தேடி வருகின்றனர்.

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு விசைபடகில் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் கடத்த இருப்பதாக பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது இதனையடுத்து மண்டபம் மெரைன் பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர் அப்போது மண்டபம் வடக்கு கடற்கரை பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த ஆயுப்கான் என்பவருக்கு சொந்தமான விசைபடகை சோதனை செய்த போது அதில் சாக்கு மூட்டைகளில் சுமார் 200 கிலோ மதிப்பிலான கடல் அட்டைகள் உயிருடன் மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தையடுத்து கடல் அட்டைகள் மெரைன் பொலிஸார் பறிமுதல் செய்தனர். பொலிஸார் வருவதை அறிந்த கடத்தல்காரர்கள் விசைபடகில் இருந்து கடலில் குதித்து தப்பி சென்றனர்.

இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த மண்டபம் மெரைன் பொலிஸார் விசைபடகின் உரிமையாளர் மற்றும் படகில் இருந்து தப்பி ஓடிய மீனவர்களையும் தனி படை அமைத்து தேடி வருகின்றனர். மேலும் கடத்த லுக்கு பயன்படுத்திய 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான விசைபடகை பறிமுதல் செய்த மெரைன் பொலிஸார் மண்டபம் வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் சர்வதேச மதிப்பு சுமார் மூன்று லட்சம் ரூபாவாகும். (மு-281)

## அனைத்து பல்கலைக்கழக...

தமிழரின் பாரம்பரிய கலைகளை உள்ளடக்கி மாபெரும் தமிழ் விழா இலங்கையில் முதல்முறையாக இந்தியாவின் செம்மொழி மாநாட்டிற்கு இணையான பிரமாண்ட மேடையமைப்பில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம் போன்ற அனைத்து இடங்களையும் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு வலம்புரி நாளிதழ் ஊடக அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## பத்திரிகைகளின்...

குரல் ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் நேற்று பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டனர்.

மேற்படி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களை விசாரிப்பதற்கான நீதிமன்ற அனுமதியை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

### தன நிதானய

திகதி 2018-09-16
சீட்டிழுப்பு இலக்கம் 50

ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 15 19 43 69

### கொவிசெத

திகதி 2018.09.16
சீட்டிழுப்பு இலக்கம் 1884

ஆங்கில எழுத்து: I
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 08 19 26 65

### மஹஜன சம்பத

திகதி 2018/09/16
சீட்டிழுப்பு இலக்கம் 3747

ஆங்கில எழுத்து: X
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 7 5 5 0 4 7

### நீரோகா

திகதி 2018/09/16
சீட்டிழுப்பு இலக்கம் 447

லக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 04 12 67 69
போனஸ் இலக்கம்: 25

## விஜயகலா மகே...

படவுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்படும் முதலாவது வழக்கு இது என்பதால், எந்தவொரு நடைமுறை முன்னுதாரணங்களும் இல்லை. அதனால் இந்த வழக்கில் புதிய நடைமுறைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் தற்போது சாட்சியப்பதிவு நடைமுறைகள் இல்லை. எனவே சாட்சியங்களைப் பதிவு செய்து நெறிப்படுத்துவதற்கான நடைமுறைகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்பாடு செய்யவேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றிலும், அரசியலமைப்பின் 157 (அ) பிரிவை மீறியதாக மேன்முறையீட்டு நீதிமன்றிலும் என இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக சர்வதேச உடன்படிக்கையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டத்தின் கீழ் மூன்றாவது குற்றச்சாட்டு முன்வைக்கப்படவிருந்தது. எனினும் அதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்பதால் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக குற்றவியல் நடைமுறைக் கோவை 120ஆம் பிரிவின் கீழ் நீதவான் நீதிமன்றில்- பொலிஸார் அடுத்த வாரம் வழக்குத் தொடுப்பார் என எதிர்பார்க்கப்படு கிறது என்று சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அதிகாரியை மேற்கோள்காட்டி நேற் றைய சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 157 (அ) கூறுவது என்ன?

(1) இலங்கையின் ஆள்புலக்குள்ளாகத் தனி அரசொன்று அமைக்கப்படுவதற்கு ஆள் எவரும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு அளித்தால், ஆக்கமளித்தல், ஊக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது.

(2) அரசியற் கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒருங்கமைப்பு எதுவும் இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாக தனி அரசொன்றை அமைத்தலை தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருக்கல் ஆகாது.

முதலாம் பந்தியின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற ஆளெவரும் குற்றப்பகர்வின் மீதும் சட்டத்தால் விதந்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய நடைமுறைகளுக்கு இணங்கவும் ஆனவிளக்கத்தின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றதன் மேல்,

✦ ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு குடியியல் தகுதியீனத்துக்கு உட்பட்டவராதல் வேண்டும்.

✦ அத்தகைய ஆளினதும் அவரது குடும்பத்தினதும் சீவனத்திற்கு அவசியமாக உள்ளவை என அத்தகைய நீதிமன்றின் கட்டளை ஒன்றினால் தீர்மானிக்கப்படுகின்ற ஆதனங்கள் தவிர்ந்த அவரது அசைவற்றதும் அசைவுள்ளதுமான ஆதனங்களை இழத்தல் வேண்டும்.

✦ ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலப்பகுதிக்கு குடியியல் உரிமைகளுக்கு உரித்துடையவராதலாகாது.

✦ அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பின் அந்தப் பதவியிலிருந்து அவரை ப்பி(

## சுன்னாகத்தில்...

வீட்டில் இருந்த பொருட்களை அடித்து உடைத்துச் சேதம் விளைவித்து விட்டுத் தப்பிச் சென்றது. இச்சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில், ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில், மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட குழுவொன்று, வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த பொருட்களை அடித்து நொருக்கியது. இதன்போது, வீட்டில் இருந்த பெண்கள் இருவர், அங்கிருந்து தப்பிச் சென்று, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (மு)

## ஆட்சியை கவிழ்...

பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். பதுளையில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் கவிழ்ந்து விடும் என்பதால், இந்தியா எதிர்காலத்தில் அரசாங்கத்தை கவிழ்க்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கட்சிக்கு ஆதரவளிக்கும்.

தனது சகோதரர் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறவில்லை. தனது சகோதரரைப் போல் வேறு ஒருவரை வேட்பாளராக நிறுத்த முடியும் என்று மாத்திரமே அவர் தெரிவித்துள்ளதாகவும் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார். (மு)

## 4-வது நாளாக...

நான்காவது நாளாகவும் தொடர்கிறது. தமது வழக்குகளை விரைவாக விசாரித்து விடுதலை செய்யுமாறு கோரியே இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ம.சுலக்ஷன், இ.திருவருள், சூ.ஜெயச்சந்திரன், இரா.தபோரூபன், சி.தில்லைராஜ், இ.ஜெகன், சி.சிவசீலன் மற்றும் த.நிமலன் ஆகியோர், கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களில் இவர்கள் மேற்கொள்ளும் ஐந்தாவது உண்ணாவிரதப் போராட்டம் இதுவாகும். எனினும் ஒவ்வொரு போராட்டத்தின்போதும் போலியான வாக்குறுதிகளை வழங்கி போராட்டம் இடையில் நிறுத்தப்பட்டுப் பின்னர் மீண்டும் போராட்டத்தில் இவர்கள் குதிப்பது தொடர்கதையாகி வருகிறது. (மு-9)

## வலம்புரிச் செய்...

ஊடக இணைப்பாளார் அப்துல்லாஹ்.

வலம்புரி பத்திரிகை தமக்கு எதிராகச் செய்திகள் பிரசுரிப்பதாகவும், இதனால் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் தெரிவித்ததுடன், முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நாளான எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதி பாரிய எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. அது தமிழ் மக்களுக்கு எதிர்பாராத ஒன்றாக அமையும், அதன் விளைவை நீங்கள் அனுபவியுங்கள் எதிர்காலத்திலும், எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில் அவருக்கு எதிராக நேற்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மினின் ஆதரவாளர்கள் எனக்கருதப்பட்ட குழுவினர் இரண்டு தடவைகள் வலம்புரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் வலம்புரி நாளிதழின் பிரதிகளை எரியூட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (மு-9)


### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள பாவித்த கொங்கிறீற் கல்லு அறுக்கும் மெசின் -2 பலகையுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0786155929

A/Lக்குப் பின்னரும் படித்துக்கொண்டே இருப்பதா?

O/L உடன் 6 மாதங்களில் டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடாவில்

ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல் வேலைவாய்ப்புடன்

Tourism & Hospitality Management

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்

(ஹொட்டேல் தொழில்துறைப் பயிற்சி)

FREE ENGLISH for COMMUNICATION

3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் உத்தரவாதம்!

ஆரம்பம் செப்.24 திங்கள்

0777 324 004

077 36 16 798, 021 221 9 221

No.1 Award Winning Institute of the North

SIKARAM ACADEMY

Business - Hospitality - English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-3858)

10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, (2ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

www.sikaram.lk Sikaram Academy

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

(C-3765)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 18.09.18 செவ். 3 pm.

181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் :17.09.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

### சிறுநீரகம் தேவை

கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட நபர் ஒருவருக்கு B+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகின்றது. தரவிரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(சன்மானம் வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு:

0770047538, 0770525006

(5684)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

(C-3782)

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### கண்ணீர் அஞ்சலி



அமரர் வல்லிபுரம் செல்வராசா (சின்னையா)

அவர்கள் கடந்த 10.09.2018 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உரும்பிராய் மடத்தடி, உரும்பிராய்.

- நகுலன் ஸ்ரோர்.

### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்துக்கு கீழ்வருவோர் தேவை.

1. வயரிங் வேலை தெரிந்தவர்கள் (ரூ.1,500)
2. பெயின்றிங் வேலை (ரூ.1,200)
3. மாபிள் வேலை (ரூ.1,500)
4. மேசன் வேலை (ரூ.1,500)

மதிய உணவு வழங்கப்படும்.

தொடர்பு: 0765541472

(5698)

### உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Granton International நிறுவனம் இலங்கையில் 40 கிளைகளை ஸ்தாபித்துள்ளது மீண்டும் வடக்கில் இரு கிளைகளை ஸ்தாபிக்க உள்ளது. இதற்கு O/L or A/L படித்த ஆண்/பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு வழங்கவுள்ளது.

- Customer Service
- Administor
- Assistant Manager
- Training Manager
- Marketing Executive
- Back Officer
- Accounter

100% இலவச பயிற்சி

(5701)

- 180 நாட்களுடன் கூடிய பயிற்சியும் நிரந்தர வேலையுடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பு.
- 18 - 30 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்பு தொகையாக 16,500/= - 22,500/=. பயிற்சியின் பின் வேலை நிரந்தரமாக்கப்படுவதுடன் 45,000/= மேல் பதவிக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளலாம்.

0767707759, 779994807

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.